Annamalai University Tamil Series

கோசர்

பாஷா கவிசேகர மகாவித்வான்

ரா. இராகவையங்கார்

எழுதியது

அண்ணாமலை நகர்

1951

முதற் பதிப்பு — 1951

Printed at COMMERCIAL PRINTING & PUBLISHING HOUSE,
46, Armenian Street, Madras-1

முன்னுரை

கொங்கிளங்கோசர் என்றும், நான்மொழிக் கோசர் என்றும், வாய்மொழிக் கோசர் என்றும், துணைநேர்க் கோசர் என்றும் பண்டைத் தமிழ்த் தொகை நூல்களிற் காணப்படும் பெயர்கள் யாரைக் குறித்து நிற்பன, அவர்கள் எங்கிருந்து தென்றமிழ் நாட்டுப் போந்தனர் என அறிஞர் பலர் ஆராய்ந்து இதுகாறும் ஓர் முடிவிற்கு வரவில்லை. இதனைப் பலபட ஆய்ந்து காலஞ்சென்ற பாஷாகவி சேகரர் மகாவித்வான் ரா. இராகவையங்கார் அவர்கள் எழுதியுள்ளார். இப்பெரியார் 1935 முதல் 1940 வரையில் இப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆராய்ச்சிப் பகுதித் தலைவராக இருந்தார். அக்காலை அவருடனிருந்து பணியாற்றும் பேறு எனக்கு வாய்த்திருந்தது. இக்கட்டுரை அப்பொழுது அவரால் எழுதப்பட்டதாகும். இதன்கண் ஆசிரியர் கோசர் முதலிற் கொங்கில் வதிந்தவர் என்றும், பின்னர் குடகடற் புறத்து மலை நாட்டிற் குடியேறினர் என்றும், நான்மொழி நாடு என்ற தொடர், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்ற திராவிட மொழிகள் நான்கும் ஒருங்கே வழங்கப்பெற்ற சேலம் சில்லா நாமக்கற் சீமையையே சுட்டும் என்றும், அவர்கள் தொன்று தொட்டு வந்த தமிழ்க் குடிமக்கள் அல்லர் என்றும், வத்ஸம் என்னும் வட சொல்லுக்கு இளமை எனப் பொருளுண்டாகலின் வத்ஸ கோசரே இளங்கோசர் என வழங்கியிருத்தல் கூடும் என்றும், எஞ்ஞான்றும் ஒருபடித்தாக ஒருவற்கிளமை யெய்தாதாகலின், இளங்கோசர் என்னும் பெயர் இளமைப் பருவம் குறித்து வந்த பெயர் அன்றென்றும், கோசம் என்ற ஓர் ஆரிய சூள் முறையைக் கையாண்டதனால் அவர்கள் கோசர் எனப்பட்டனர் என

றும் அவர்கள் வன்கட் ஆட்சியில் அல்லர் என்றும், 'தொன்முதுகாலத்துப் பொதியில்' என்று குறுந்தொகையிற் காணப்படும் 'பொதியில்' மதிமிகு குறுமுனி வதிந்த பொதியில் அன்றென்றும், அது மோகூரை யடுத்துள்ள ஆலம்பலமே யாகும் என்றும், கோசர் காஷ்மீர நாட்டிலிருந்து வேளிரை அடுத்துத் தமிழ் நாடு போந்தவர் என்றும், வம்பமோரியர் சேனைக்கு முன்னணியாக நின்று மோகூர் மன்னனை எதிர்த்தவர் அன்றென்றும், அதற்கு மாறாக மோகூர் மன்னர்க்கு உற்ற துணையாக மோரியரை எதிர்த்த பெருவீரர் என்றும், வேளிர்க்கும் கோசர்க்கும் நீடித்த பகைமை உண்டென்றும், அகுதை, திதியன், குறும்பியன், ஆதனெழினி, தழும்பன் முதலிய வீரர்கள் கோசர் மரபினரென்றும், கோசர் புத்தூரே கோயம்புத்தூர் எனத் திரிந்தது என்றும் பல இலக்கிய ஆதரவுகளையும் சாசன ஆதரவுகளையும் காட்டித் திறம்பட எழுதியுள்ளார். நுண்மாணுழைபுலமிக்க இப்பேரறிஞர் ஆராய்ச்சியிற் காணப்படும் கருத்துகள் யாவும் புதிய கருத்துகள். காய்தல் உவத்தல் அகற்றி ஆராயும் பண்புடையாளர்கள், இதனை நன்கு ஆராய்ந்து உண்மை தெளிவாராக.

இ. சே. வரதராஜய்யர்.

கோசர்

சிலப்பதிகார அரும் பதவுரைகாரர்.

**"கொங்கிளங் கோசர் தங்கள்நாட் டகத்து
நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய
மழைதொழி லென்று மாறாதாயிற்று"**

(சிலப். உரைபெறு கட்டுரை)

என்புழிக் கோசரைக் "குறும்பு செலுத்துவார் சில வீரர்" எனவுரைத்தார். அடியார்க்கு நல்லார் ஈண்டுக் "கொங்கு மண்டிலத்து "**இளங்கோவாகிய கோசர்**" என்று கருதி மொழிந்தனர். அரும் பதவுரைகாரர் குறும்பு செலுத்துவார் என்றது, சிறிய அரண்களில் ஆட்சி செலுத்துவார் என்றவாறும். அடியார்க்கு நல்லார் கொங்கு மண்டிலத்து **இளங்கோவாகிய கோசர்** என்றது, வேந்தர் வழியினராய்க் கொங்கில் வதிகின்ற கோசரைக் குறித்ததாகும். இவர் இங்ஙனங் கருதியது மேல் வரந்தருகாதையில் இவரைக் "குடகக் கொங்கர்" எனக் கூறியதுபற்றி யென்று துணியலாம். குடகக் கொங்கர் என்றவரைக் குடமலை நாட்டாராயிருந்து கொங்கிற் குடியேறி வதிகின்ற இளங்கோ வழியினராகிய கோசர் என இவர் கருதினராவர். இவர் கோசரை இளங்கோவாகிய கோசர் என்றது இவரைப் பற்றிச் சான்றோர் கூறிய பல்லிடங்களிலும் இளங்கோசர் என வருதல் பற்றியென்றுய்த்துணரலாகும். இதனுண்மை மேலாராயப்படுவதனால் நன்கு வெளியாகும். வரந்தருகாதையுள் ஆரிய மன்னர் முதலாகக் கயவாகு வேந்தனிறுதியாகக் கூறிய அரசர்களுக்கிடையே "குடகக் கொங்கர்" என இவரைக் கூறுதலான், இவரையும் அவர் அரசராகக் கருதியே இளங்கோவாகிய கோசராக வுரைத்தனரெனத் தெளியலாம். கோசரை இளங்கோவாகிய கோசர் என வழங்கியதில் ஒருண்மையுளதாதலோர் வேண்டும். செங்குட்டுவன் கண்ணகிக்குக் கொ[illegible]

கோயில் எடுப்பித்தது அடியார்க்கு நல்லார்க்கு உடன்பாடின்மையால், குடக் கொங்கர் என்பார் குடகப் புறத்து நின்று கொங்கிற் றங்கியுள்ளார் என்று இவர் கருதினர் ஆவர். இக்கருத்துக் கொங்கிளங் கோசர் என்னுந் தொடர்க்கு அவர் கூறிய வுரையான் உய்த்துணரப்படுவது. குடகக் கொங்கர் என்பது கொங்கினின்று குடகடற் புறத்துக் குடியேறினரை நன்கு குறிக்குமென்றுணர்க. கொங்கிற் குடகர் என்றால் அடியார்க்கு நல்லார் கருத்து நன்கு பொருந்தும். அங்ஙனமல்லாது குடகக் கொங்கர் என்றலைற் குடகப் புறத்தும் கொங்கர் என்ற பெயரையே யுடையர் என்று தெளிய கிற்றல் காண்க. ஆஅய் என்னும் வேளிர் வேந்தன் கொங்கரைக் குட கட லோட்டிய செய்தி,

"கொங்கர்க் குடகட லோட்டிய ஞான்றை"

(புறம், 130)

என்பதனால் அறியப்படுதலால் இதனுண்மை எளிதினுணரலாம். செங்குட்டுவன் கொங்கிற் கோயில் எடுத்தது கண்டு, கொங்கராய்க் குடகிலுள்ளாராகிய கோசரும், தாங்கள் தங்கியுள்ள குடமலை நாடுகளிலே கண்ணகிக்கு விழவுஞ் சாந்தியுஞ் செய்ய விழைந்தனர் என்பதே இயைபுடைத்தா மென்க. இதுவே அரும் பதவுரைகாரர் கருத்தென்பது, அவர் சிலப்பதிகார வேட்டுவவரியில் "**கொங்கச் செல்வி குடமலை யாட்டி**" எனவருமிடத்து "மேற்பட்டு இவளைத் தெய்வமாகக் கொண்டாடுமிடம் கூறினபடியாலே இவள் துர்க்கையாகவே பிறந்தனள் என்றவாறு." என விளக்கிய வாற்றானுணரலாகும். இவருரையாற் கண்ணகியைத் தெய்வமாகக் கொண்டாடிய இடம் கொங்குங் குடமலையு மாதல் எளிதிலறியலாம். இவர் கருத்துப்படி நோக்கிற் கொங்கிளங் கோசர் என்பாரைக் குடகக் கொங்கர் எனவரந்தரு காதையில் விளக்கியதனால், கொங்கினின்று குடகப் புறத்துக் குடியேறிய இளங் கோசரென்பதே திரண்ட பொருளாகுமென்ப. இதனாற் கொங்கிளங் கோசர் தங்கணாட்டகமென்பது இளங் கோசர் கொங்கினின்று போய்த் தங்

கிய குடமலை நாட்டகம் என்று வாரும். இவற்றாற் கோசர் முதலிற் கொங்கில் வதிந்தவரென்றும், பின்னர்க் குடகடற் பக்கத்து மலை நாட்டிற் குடியேறியவரென்றும் துணியப் படுதல் காண்க. மதுரைக் காஞ்சியில் இவரை "நான் மொழிக் கோசர் தோன்றியாங்கு" என்றார். இவ்விடத்து நச்சினார்க்கினியர் "நான்கு வகையாகிய கோசர் வஞ்சின மொழியாலே விளங்கினாற் போன்று" என வுரைத்தார். இங்ஙனம் நாற் கோசர் மொழித் தோன்றி யாங்கு எனச் சிதைத்துக் கூட்டாது **நான் மொழி நாட்டுக் கோசர்** தோன்றினாற் போன்று எனக் கிடந்தபடியே பொருள் கொள்ளலா மென்க. முற் காலத்து நான் மொழி நாடென ஒன்றுண் டென்பது சாசன ஆராய்ச்சியாளர் கண்டது. இதனைத் திருவறைக் கல்லும், நான் மொழி நாடும் உடைய வத்தராயனை விடு காதன்" (Topographical List of South Indian Inscriptions No. 213 - 11 of 1906) என்பதனான் அறியலாம். இதன்கட் கூறப்பட்ட திரு வறைக்கல் இக் காலத்து நாமக் கல் என வழங்குவதென்று துணியப்படுவது. இதன் கட் கூறிய நான்மொழி நாடு திருவறைக் கல்லுக்குப் பக் கத்ததா மென்பது பொருந்தும்.

ஈண்டு நான் மொழிகளாவன தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் என்பனவாகும். இந் நான் மொழியும் வழங்குதற்குரிய எல்லையில் இந்நாமக்கற்புறம் இருத்தல் பற்றி இப்பெயரெய்தியதென்று தெளியலாம். இந் நான் மொழி நாடு மழகொங்கின் வடக்கணுள்ளதனால் ஈண்டு முன் வதிந்து பின் குடகிற் குடியேறிய கோசர் "**கொங்கிளங் கோசர்,** குடகக் கொங்கர்" எனப் பட்டாரென்று கொள்ளத்தகும்.

இனி இங்ஙன மன்றி மாமூலனார் அகப்பாட்டின் (15)
"மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்

தோகைக் காவிற் றுளுநாட்டன்ன"

எனக் கூறுதலாற் கோசர் ஆதியிலே துளுநாட்டின் வதிந்தவர் தாமென்றும், பின்னர்க் கொங்கின் வதிதலாற் கொங்கிளங் கோசர் குடகக் கொங்கர் என வழங்கப் பட்டன ரென்றும் கூறுவாருண்டு. எங்ஙனமாயினும் கொங்கிளங் கோசர், கோசர் துளுநாடு என்பவற்றான் இவர் ஆதியில் வதிந்த இடங்கள் கொங்கு நாடும், துளுநாடும் எனக் கொள்ளல் பொருந்தும் இக் கோசர் கண்ணகிக்கு விழவுஞ் சாந்தியுஞ் செய்தல் கேட்கப்பட்டவாற்றால், இவர் சேர வேந்தன் செங்குட்டுவனை யொத்து வேத வழக்கொடுபட்டவரல்லது பிறராகா ரென்று துணியலாம். இவரும் பிறரும் இலங்கைக் கயவாகு வேந்தனும்,

"இமய வரம்பனின் னன்னாட் செய்த நாளணி வேள்வியில், வந்தீகென்றே வணங்கினர் வேண்ட"

(சிலப். வரந்தரு. 161-163)

லான் இவ் வுண்மை யுணர்க. கோசர் புரிந்த விழவுஞ் சாந்தியும் வைதீகமேயா மென்று கொள்க.

இவ்வாறு வேத வழக் கொடுபட்டுக் கோசர் என்ற பெயரிற் சிறந்த இவ் வீரருடைய அரிய செய்திகள் பல செந்தமிழ்ச் சான்றோர் தொகை நூல்களிலாங்காங்குக் கேட்கப் படுவன வேனும், இவர் பண்டு தொட்டுள்ள தமிழ்க் குடி மக்களெனத் துணிதற் கில்லை. கோசர் துளுநாடு என்றதனானும் (அகம். 15) "நான்மொழிக் கோசர்" (மதுரைக் காஞ்சி) என்றதனானும், இவரைத் தமிழரென ஒரு தலையாகத் தெளிதலரிதாதல் காண்க. இவரைப் பாடிய பல்லிடத்தும் நல்லிசைப் புலவர்,

"இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கட் கோசர்" (அகம். 90) எனவும்
"துனைகாலன்ன புனைதேர்க் கோசர்" (அகம். 251) எனவும்
"வளங்கெழு கோசர் விளங்குபடை" (அகம். 205) எனவும்
"வென்வேல், விளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்
இகலின ரெறிந்த வகலிலை முருக்கிற்
பெருமரக் கம்பம் போல" (புறம். 169) எனவும்
"வலம்புரி கோசரவைக் களத்தானும்" (புறம். 283) எனவும்

கூறுதலான் இவர் வேற்படையான் வென்றி யெய்திய பெருந்தேர் வீரரென்று தெரியலாவது. "இரும்பிடம் படுத்த" என்புழிப் பழைய வுரைகாரர் இரும்பினை வேலென்றே கொண்டார். வலம்புரி கோசரவைக் களம் என்றதனுலிவர் தந்தம் படை வென்றியைக் காட்டலல்ல போரவைக் களம் வைத்துப் போற்றின ரெனத் தெரிய லாம். இவர் நன்றல்லாத காலத்தும் தம்முடைய நட்பிற் கோடாதவரென்பதும், நெடுங்காலஞ் சென்றேனும் கருதியது முடிக்கும் பெரிய சூழ்ச்சியை யுடையவ ரென்பதும், தமக்கே சிறப்பாக வாய்மையை விடாது போற்றிப் புகழ் படைப்பவ ரென்பதும், தம்மகத்துப் புக்க வறியவரை நன்று தாங்கும் பேரளியுடையவ ரென்பதும் பிறவுஞ் சான்றோர் பாடல்களானன்கறியக் கிடப்பன வாகும்.

"நன்றல் காலையு நட்பிற் கோடார்
சென்று வழிப்படு உந்திரிபில் சூழ்ச்சியிற்
...........கோசர் (அகம். 113) எனவும்
"ஒன்று மொழிக் கோசர்" (அகம். 196) எனவும்
"வாய் மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர்" (அகம். 205) எனவும்
"கோசர் நன்மொழிபோல வாயாகின்றே" (குறுந். 15)
எனவும்
"மெய்ம்மலி பெரும் பூட் செம்மற் கோசர்" (அகம். 15)
எனவும்
"கோசர் துளுநாட்டன்ன
வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பின்" (அகம். 15)

எனவும் வருவனவற்றான் நன்கறிக. இவர் வீரத்திற் கேற்ற மாறுப் பெருவாய்மையும் அவை யீண்டிற்கு மேற்ப உற்றுழியுதவும் பெருவண்மையும் உடையரென் பதும் இங்குக் காட்டிய மேற் கோள்களால் நன்கறியலா கும். இவற்றுடன், சென்று வழிப்படுந் திரிபில் சூழ்ச்சி யுடையரென்பு சான்றோர் புகழ்தல் நினைந்து கொள்க. வறுங்கை வம்பலரையுங் கொன்று மகிழும் பாலை நில மாக்கள் போலாது அவரைத் தாங்கும் பண்பினரென்று

இவர் தனியே புலவராற் சிறப்பித்துப் பாடப் படுதலான் இவர் கொடை மேம்பாடு நன்குணரப்படும்.

"நெறிசெல் வம்பலர்க்கொன்ற தெவ்வர்" (அகம். 113)
என்றும்

"அம்பு தொடை யமைந்தி காண்மார் வம்பலர்
கலனில ராயினுங் கொன்று புள்ளூட்டும்
கல்லா விளையர் கலித்த கவலை" (அகம். 375) என்றும்
"வம்பலர்ச் செகுத்த அஞ்சுவரு கவலை" (அகம். 161)
எனவும்

வருமிடங்களிற் பாலை நில மாக்கள் இயல்பு காண்க.

மேல் எடுத்துக் காட்டிய கோசர் மேற்கோள்களால், இக் கோசர் நாகரீகத்திற் சிறந்த சத்திய வீரரென்பது நன்கு புலனாகும். இச் சத்திய வீரர் கோசர் எனப் பெயர் சிறந்த தன் காரணம் பலபடியாக ஆலோசிக்கப் படுவது. கோசம் என்பது பெருங் கதைத் தலைவனான வத்தவர் கோன் உதயணன் இருந்தரசாண்ட கோசாம்பிக்கு வழங்கும் பெயராகும். இது கங்கையும் யமுனையுங் கலக்குமிடத்துள்ள பிரயாகைக்குச் சிறிது தூரத்து யமுனைக் கரையிலிருந்த தென்பர். இப்போது கோசம் என்ற பெயரிலுள்ள சிற்றூர் இப்பெரு நகரிருந்த தலமாகுமென்பர் (கன்னிங்ஹாம். பூகோளம் பார்க்க.) கோசாம்பி நகரம் வான்மிகத்துங் கூறப் பட்டுள்ளது.

பத்தநம் கோசகாராணும்
...மார்க்கயத் பிஸ்ததஸ்தத
ராமஸ்ய தயிதாம் பார்யாம்,
ஸீதாயாம் தசரதஸ் நுஷாம்

இதனை லிந்நகரின் பழைமை யறியலாம். இத் தென்னாட்டுத் தமிழ்ப் பாடல்களில் ஒரு சில வத்தவர் கோனைப் பற்றி வருவன கேட்கப் படுதலான், வத்ஸ நாட்டுக் கோசத்தினின்று இத் தென்னாடு புக்குச் சீருஞ் சிறப்பும் பெற வாழ்ந்த வீரர் பலருண்டென்றுய்த் துணரப்படுவது. தம் வத்ஸநாடு பஞ்சம் பட்டும் பூகம்ப மெய்தியும் தடுமாறிய காலத்து, இவர் இத் தென்னாடு புக்குவதிந்தவ

றென்று கொள்ளலாம். தென்னாட்டில் வாழ்ந்தவர் மரபில் வந்தவர் தலைவனைப் பற்றிய நூல் "வச்சத் தொள்ளாயிரம்" என்று பெயர் பெறும். வச்சம் என்பது வத்ஸ தேசமாகும். நூற் பாடலை வீர சோழிய வுரை காரர் பெருந்தேவனார், தொகை மொழிக்கு உதாரண மாகக் காட்டி விளக்கிக் கூறியவாற்றான் இவ்வுண்மை அறியப் படுவது. அவர்,

"வேட்டொழிவ தல்லால் வினைஞர் விளைவயலுட்
டோட்ட கடைஞர் சுடுதந்து—மோட்டாமை
வன்புறத்து மீதுடைக்கும் வச்சத் திளங்கோவை
இன்புறுத்த வல்லமோ யாம்" (வீரசோ. அலங். 11. மேற்.)

இதனுட் சிறப்புடையளாகிய தலை மகளை இகழ்ந்து தலைமகன் சிறப்பில்லாத பரத்தையர் மாட்டு நிகழா நின்றமையின், நாட்டுக் கடைஞருள்ளார் சிறப்பில்லாத நந்தை ஊன்றுப் புடைய யாமையின் புறத்து உடைத்துத் தின்பர் என்னு மிதனால் தொகுத்து விளங்கச் சொன்னமையாற் றொகை மொழியாயிற்று; "வச்சத் தொள்ளாயிர முழுதும் தொகை மொழி யெனக் கொள்க." என வச்சத் தொள்ளாயிரப் பாட்டை எடுத்துக் காட்டி விளக்கிய வாற்றான் இஃதுணரலாம்.

வாடை குளிர மருந்தறிவா ரில்லையோ
கூட லினியொருகாற் கூடாதோ—ஓடை
மதவார ணத்துதயன் வத்தவர்கோ னாட்டிற்
கதவார தோதமியேன் கண்" (பெருங். முகவுரை. பக். 9).

என்ற பழம் பாடலும் இவ்வச்சத் தொள்ளாயிரமே யாகும். இவற்றான் முன்னமே கோசம் என்னும் ஊரில் அரசாண்ட வத்ஸ தேயத்தர் வழியினர் இத் தென்னாடு புக்கு வாழ்ந்து வழங்கிச் சான்றோர் பாடல் பெற்றது நன்கு துணியலாம். இவ்வச்சத் தொள்ளாயிரப் பாட்டில் 'வச்சத்திளங் கோவை' எனப் பாடியதனால், இந் நாட்டுக் குடியேறியவன் வச்சத்திளங் கோவேந்தன் வழியினன் என்று தெளியலாகும். இவன் கோசத்தினின்று இங்கு வந்தவன் வழியினனாதலால் இவன் வழிக் கோச

ரெல்லாம் இளங்கோசர் என்று வழங்கப் பட்டனரென உய்த்துணரலாம். இதனைனேதான் அடியார்க்கு நல்லார், கொங்கு மண்டிலத்து இளங் கோவாகிய கோசர் என உரை கூறினரென்று துணியலாம். இதனாற் கோசர் தமிழ் மூவேந்தர் இளங் கோவழியினரென நினைதற்காகாமை யுணர்க. அங்ஙனம் நினைதற்கு மேற்கோளில்லாமையும் நோக்கிக் கொள்க.

இனி இக் கோசாம்பியை ஆண்ட அரசரோ இளன் என்னும் திங்கட் குலத்து வேந்தன் வழியினரென்றும், அது பற்றியே அவன் வழிவேந்தர் இளங்கோ எனப் பெயர் சிறப்பரென்றும், இவர் வட நாட்டில் ஐலர் எனவும் அயிரர் எனவும் பெயர் சிறந்தனர் என்றும், இவருள் ஒருவன்தான் **காரவேலா** என்னுங் கலிங்க வேந்தனென்றும் கருதுவாருண்டு. காரவேலா வேந்தன் அத்திகும் பாச்சாசனத்திற்றன்னைச் சேதியர் வழியினன் என்று வெளியிடுதலால், இவன் கோசமாண்ட உதயணனுடைய தாயின் மரபைச் சேர்ந்தவனாதல் தெளிவாகும். உதயணன் மாதுல னாட்டையும் தந்தை நாட்டையும் ஒருங்கு ஆண்டவனென்பது பெருங்கதையான் அறியப்பட்டது.

இனி இவர் வத்ஸ தேசத்துக் கோசம் என்ற தலை நகரினின்று வந்தவராதலான் இளங்கோசர் என வழங்கப் பட்டனரெனின் அதுவு நன்கு பொருந்தும். வத்ஸ மொழி ஆரியத்தில் இளமைக்குப் பெயராதலான் **வத்ஸ கோசர்**—இளங் கோசர் என மொழி பெயர்த்துத் தமிழரால் வழங்கப்பட்டன ரென்றுங் கொள்ளலாம். கோசரைக் கூறிய பல விடத்தும் சான்றோரெல்லாம் பல்லிளங் கோசர், நல்லிளங் கோசர், கொங்கிளங் கோசர் என வழங்கிக் காட்டலான் இஃது உடலிளமை பற்றியதாகாதென்பது ஒரு தலையாகத் துணியலாம். வத்ஸ தேசத்தை இளநாடெனக் கொண்டு அந் நாட்டு வேந்தனை இளங் கோவென்றும், அந் நாட்டுக் கோசரை இளங் கோசரென்றும் வழங்கின ரென்பது பொருந்தியதாகும். அடியார்க்கு நல்லார் கொங்கு மண்டிலத்து

இளங்கோவாகிய கோசரும் என்றது கொங்கு மண்டிலத்துள்ள வத்ஸ வேந்தாகிய கோசரும் என்னுங் கருத்தா லென்றுய்த்துணரலாகும்.

மஹா மஹோபாத்யாய கங்கா நாத்ஜா என்னும் பெரியார் (தர்பங்கா மந்திரியார்) கோசத்தை யடுத்துள்ள பிரயாகையை, "இளவாஸா என்று பழையோர் கூறுவர்" என்று சொல்வர். இங்ஙனங் கொள்ளாது கோசர் எப்போதும் இளமையோடே யிருப்பரென்று துணிவது பொருந்தாதாம். "ஊர்முது கோசர்" (அகம். 262) என வழங்கலான், இவர் எல்லா மக்களும் போன்று யாக்கை மூத்துக்கழிதலுண்டென்க. இதனால் இவரை இளங் கோசர் எனப் பல்லிடத்தும் வழங்குவது இவர் குடி பற்றியது அல்லது நாடு பற்றிய தெனின் நன்கு பொருந்து மென்க. இளன் வழியிற் குருகுல முண்டாதலும் அக் குரு குலத்து உதயணன் பிறத்தலுங் கண்டு, இவ் வுண்மை துணியலாம். "குரு குலத்தரசன் சாயாச் செங் கோற் சதாணிகன்" மகன் உதயணனைதல் நோக்கிக் கொள்க. இவ் வுதயணனுக்குப் பின்னே இவன் குலத் தவர் பலர் வத்ஸ நாட்டுக் கோசத்தினின்று முதலிற் கொங்கிற் குடியேறி யிருந்தது, "கொங்கு மண்டிலத்துட் பல பாகங்களில் வத்தவன், வத்தராயன், வச்சராயன் என்னும் பெயர்கள் இக் காலத்து வழங்கப் படுவன" என்று மஹா மஹோபாத்யாயர் Dr. உ. வே. சாமி நாதையரவர்கள் பெருங்கதை முகவுரையிற் கூறுதலா னும் வலியுறுதல் காண்க. கொங்கு வேளிர் உதயணன் பெருங் கதையைத் தமிழிற் பாடுதற்கும், இக் கொங்கிற் குடியேறிய கோசர் மரபிற் பெருவள்ள லொருவன் காரணமெனின் அதுவும் நன்கு பொருந்து மென்க. உதயணனை தாயின் குலமான ஏயர் குலமும் இந் நாட்டுக் குடியேறி யிருந்தது 63 நாயன்மாருள் ஏயர்கோன் கலிக்காம நாயனார் என்னும் பெயரானன் றறியலாகும். இதனால் உதயணன் தாய் மரபினரும் இங்கு வந்து வதிதல் காணப்படும். கோசம் ஆண்ட உதயணன்.

புத்தர் அவதரித்த நாளில் பிறந்தவன் என்று கூறுதலான் இவன் பழமை நன்குணரலாகும். இவனை மத்ஸ்ய புராணமுங் கூறும்.

இனி இக் கோசரைப் பற்றி நல்லிசைப் புலவர்கள் கூறிய சிறப்பியல்புகள் பலவும் கோசாம்பியை ஆண்ட உதயணனை நண்பினர்க்குப் பெரிது மொத்து விளங்குதல் அவர் கதை நோக்கி யறிக. "நன்றல் காலையு நட்பிற் கோடார் (அகம். 113)" என்ற இக் கோசர் பெரும்பண்பு உதயணன் சிறைப் பட்டிருந்த போது அவன் நண்பனாகிய யூகி (யௌகந்த ராயணன்) அவனை விடுவிக்கப் பட்ட பாட்டானன்கறியலாகும். இக் கோசர்க்குச் சிறந்த "சென்று வழிப்படூஉ மந்திரியில் சூழ்ச்சி" யென்பது யூகி முதலியோர் உதயணன் பகை வெல்ல வேண்டிப் புரிந்த அரிய பெரிய சூழ்ச்சிகள் பல வற்றானும் நன்கறிந்ததாகும். பிறவும் இவ்வாறே ஒட்டியறிக.

இனி இக் கோசர் கொங்கு மண்டிலத்தே யல்லாமல் மேற்கடற் புறத்துத் துளு நாட்டினும் கீழ்க்கடற் புறத்து யமம் என்னும் ஊரினும் சோழர் உறையூரினும் வதிந்தன ரென்பது பழம் பாடல்களா னறியலாவது. "கோசர் துளு நாட்டன்ன" (அகம். 15) என்பதனுல் இவர் துளுநாட்டுமிக்கிருத்தல் நன்கறியப் பட்டதாம். கொங்கிளங் கோசர் என்றதனுல் இவர் கொங்கில் வதிதல் புலனயிற்று.

"செல்லூர்க் குணஅது பெருங்கடன் முழக்கிற்றாகி யாணர் இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர் கடுங்கட் கோசர் நியம மாயினும்."

(அகம். 90)

எனவருதலான், இவர் கீழ்கடற் பக்கத்துச் செல்லூர்க்குக் கிழக்கே நியமம் என்னும் ஊரில் வாழ்ந்தது புலனகும். செல்லூர்க் குணஅது பெருங்கடல் என்றதனுல் நியமம் என்னும் ஊர் கீழ்கடலை யடுத்துள்ளதுணரப்படும். இங்குக் கூறியபடியே சோணாட்டிற் செல்லூரும் அதன் கீழ்த் திசையில் நியமம் என்னும் ஊரும்

இருப்பது கண்டு கொள்க. சோணாட்டு இவர் வலிபெற்ற வீறுதலைக் கண்டு பொறாது கிள்ளிவளவன் இவர் படையைச் சிதற அடித்தனன் என்பது,

"வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர் விளங்குபடை நூறி
நிலங்கொள வெஃகிய பொலம்பூட் கிள்ளி"

(அகம். 205)

என வருதலான் அறியப் படுவது காண்க. சங்க காலத்து இச் செல்லூர்ப்புறம் கோசரால் பெருஞ் சிறப்புப் பெற்று விளங்கிய தென்பது "செல்லூர்க் குணா அது கோசர் நியம மாயினும்............கொள்குநரல்லர்." (அகம். 90) எனக் கூறியதனு னுய்த்துணரலாகும். இவ்வூரிற் சிறந்த நல்லிசைப் புலவரும் உண்டென்பது "செல்லூர்க் கோசனார்" (அகம் 66) என்பதனை னறியலாம். இக் கோசரிற் பலர் பெருந் தமிழறிஞராய்ச் சான்றோரால் நன்கு மதிக்கப் படுதல் 'கருவூர்க் கோசனார்' (நற்றிணை. 214) என்னும் பெயரானறியலாம்.

" பல்லார்க்கு மீயும் பரிசிற் கொடைத் தடக்கை
மல்லார் மணிவரைத்தோள் வண்கோசன்—மல்ல லந்தார்
செஞ் சொற் செருந்தைதன் றென்னுறந்தை யென்னும் [னும்
வஞ்சிக் கொடிமருங்குல் வந்து "

(யாப்பருங்கலவிருத்தி. ஒழிபியல்)

என்னும் பழம் பாட்டான், இவரிற் கொடையானும் வீரத்தானும் இன்சொலானும் சிறந்த செருந்தை என்பான் சோழர் உறையூரில் வாழ்ந்தது புலனாதல் காண்க.

இனிப் பிற்காலப் பாடல்களில் (வச்சத் தொள்ளாயிரம்) இவர் வத்தவர் (வத்ஸ தேசத்தார்) என வழங்கப் பட்டா ராயினும், சங்கத் தொகை நூல்களில் இளங் கோசர் என்றே பாடப்படுதலான் இவர் கோசத்தை (கோசாம்பியை)த் தலை நகராகக் கொண்ட வத்த நாட்டிற் புகுதற்கு முன்னே கோசர் என்ற பெயருடன் இருந்தவர் தாமென்று துணிவதும் பொருந்தும். அங்ஙனமாயின் இப் பெயர்க் காரணம் வேறே ஆராயப்

படும். காச்மீர தேச சரித்திரமாகிய இராச தரங்கணி யில் நட்பிற் பிழையாமைக்கு அந் நாட்டு மக்கள் கோசம் என்ற ஓர் சூள் முறை (சபத கர்மம்) மேற் கொண் டொழுகியது கேட்கப்படுவது, இவ் வுண்மையை.

"இழிசின னாகிய காசன் அரசனுடைய
ஐய நடுக்கம் போக்க உதிரத்தால் நனைந்த
தோலில் இன்று கோச முறையில் ஆணை
யிட்டனன்" (8 ஆந்தரங்கம் 3006) எனவும்)
"இராசத் துரோகிகள் தம்முட் கோச
முறையைச் செய்து அரசனுயிரைக்
கவர வுடன் பட்டனர்" (8. 280) எனவும்,
"சோமபாலன் கோச முறையில் ஆணை
யிட்டும் அரசன் படை யெடுப்பைக்
கவனியா திருந்தான்" (8. 2222)
"அரசனுந் தாமரனும் வாளோடு
உதிர நனைந்த தோலினின்று கோச முறை
யிலாணை யிட்டனர்" (ஷை. 5 326)

எனவும் வருதலான் நன்குணரப் படுவது. இஃது அந் நாட்டுத் தொன்று தொட்ட வழக்கமாகும். இவ் வாறு நட்பிற் பிழையாத பெருவாய்மைக்குக் கோச முறையை மேற் கொள்பவராதலின் இவர் கோசர் எனப் பட்டாரெனின், இத் தென்னாட்டுக் கோசரியல்பிற்கு அது நன்கு பொருந்து மென்க. இக் கோச முறை தனி யேயும வஞ்சினங் கூறி மேற் கொள்ளும் இடத்தும் உண்டென்பது ஷை 7. 746 ஆம் சுலோகத் தானறியப் படுவது; இஃது இக் கோசர் தலைவி அன்னி மிஞிலி யென்பாள் "சினத்திற் கொண்டபடிவ மாறாள்" (அகம். 262) என்பதனால் உய்த் துணரலாவது. இவரை ஒன்று மொழிக் கோசர் என்பது, இருவருள்ளமும் ஒன்றுதற் குரிய வாய்மை மொழியைக் கோச முறையின் மேற் கொள்பவர் என்று பொருளாதல் கண்டு உண்மை யுணர்க. 'கோச நாடு' எனப் பெயரிய சுனைத் தடம் காச் மீர நாட்டிலுண்டு.

இவற்றால் காச்மீரத் துவராவதிவிட்டு வேளிர் தென் னாடு புகும்போதே அவர் கூடவே ஆண்டுள்ள கோச

மூறை வீரரும் வந்தனர் என்று கொள்வது பொருந்தும். சான்றோர் பாடல்களிற் கோசர் வரலாறும் வேளிர் வரலாறும் சேரக் காணப் படுதலான் இவ் வுண்மை எளிதினறியலாம். வேளிர் கொண்கானத்தும் கோசர் அதன்கண் ஒரு பாலாகிய துளு நாட்டிலும் இருந்தல் சான்றோர் செய்யுட்களிற் கேட்கப் படுதலானும் இத் துணிபு வலியுறு மென்க. இக் கருத்திற் கேற்பக் கொள்ளின் கோச வீரர் காச்மீரத்து நின்று முன்னரே தென்னாட்டிற் குடியேறி யிருந்தன ரென்றும், பின்னர்த் தம் இனத்த வரிருக்கும் அத் தென்னாட்டே வந்தவ நாட்டுக் கோசரும் வந்துறைந்தன ரென்றும் தெளிவது பொருத்த மாகும்.

இனி இவரை அசோக சக்ரவர்த்தி தென்னாட்டுள ராகச் சிலையி லெழுதிய ஸதிய புத்ரர் என்று நினைப்பாரு முண்டு. அச்சிலை யெழுத்துக் குறித்த ஸதிய புத்ரர் வேள் புலவரசரல்லது வேறு காரென்று வேளிர் விளக்கத்துச் செவ்வனங் கூறினேன். ஸதிய புத்ரர் என்பதனை ஸத்ய புத்ரர் என்று பிறழப் படித்த தடுமாற்றத்தால் இக் கோசரை வாய் மொழிக் கோசர் என்பது கருதி அம் முடிபிற்கு வந்தாருண்டு. சிலையில் ஸதிய புத்ரர் என்றிருப்பது பல்லோரான் நன்கு விளக்கப் பட்டதனால், இக் கொள்கையின் தவறு புலப்பட்ட தென்க. இதனாற் கோசர் ஸதிய புத்ரர் எனப் பெயர் பெறு ரென்க. இனி இக் கோசருட்டலை சிறந்து புலவர் பாடற் குரியராகிய சிலர் நன் மக்களைப் பற்றிச் சிறிது கூறுவேன்.

"பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கிப்
பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்
பெரும் பெயர் மாறன் றலைவனாகக்
கடந்தடு வாய்வா ளிளம்பல் கோசர்
இயனெறி மரபினின் வாய்மொழி கேட்பப்
பொலம் பூணைவ ருட்படப் புகழ்ந்த
மறமிகு சிறப்பிற் குறுநில மன்னர்
அவரும் பிறருந் துவன்றிப்

பொற்பு விளங்கு புகழவை நிற்புகழ்ந்தேத்த
மகிழ்ந்தினி துறைமதி பெரும'' (மதுரைக். 770-79)

என வாழ்த்துதல் காணலாம்; இதன் கண் "பொய்யா நல்லிசை நிறுத்த மாறன் றலைவனுகக் கடந்தடுவாய்வாளிளம்பல் கோசர்" எனக் கூறியதனல் இம் மாறன் வாய் மொழிக் கோசர் தலைவன் என்று துணியப்படும். பொய்யா நல்லிசை நிறுத்த மாறனென்பது "வாய் மொழி நிலைஇய சேண் விளங்கு நல்லிசை வளங்கெழு கோசர்" (அகம். 205) என்ற கோசர் வாய்மைச் சிறப்பொடு பொருந்த நிற்பது கண்டு கொள்க. நச்சினார்க் கினியர் ஈண்டு ஒருபடியாகத் துணியாமல் "மாறன் இவன் குடியிலுள்ள பாண்டியன்; அன்றி ஒரு குறுநில **மன்னன்** என்றலு மொன்று" என வுரைத்தது நோக்குக. மாறன் றலைவனுகக் கடந்தடு கோசர் என்ற தொடர், மாறன் என்பவன் தமக்குத் தலைவனுகச் சென்று அடுகின்ற கோசர் எனப் பொருள்பட நிற்றலான் இம்மாறன் ஓர் குறு நில மன்னனுகிய கோசன் என்றே துணியப்படு மென்க. இவன் மாறன் என்று பெயர் பூண்டது பாண்டியர்க்குரிய நண்பினனுய் அவனுக்குப் பெருந்துப்பாகிய தன்மை பற்றி யென்றுணரலாம். இங்ஙனங் கொள்ளாது ஈண்டு மாறன் பாண்டியன் என்றாற் "பாண்டியன் தலைவனுகச் சென்றடு கோசர் நிற்புகழ்ந்தேத்த உறைமதி" என்று பொருள் பட்டு இவ் வாழ்த்துக் கேட்கின்ற பாண்டியனினும் வேருேர் பாண்டியன் றலைவனுகக் கோசர் சென்றடுதல் தோற்றி நிற்பதனல் அது பொருளாகா தென்க. நச்சினர்க் கினியர்க்கே இது திருவுள்ள மில்லாமையாற் "குறுநில மன்னன் என்றலு மொன்றெென"ப் பிறிதொன்று கூறியொழிந்தார் என்க. மாறன் றலைவனுகக் கடந்தடு கோசர் நின்வாய் மொழி கேட்ப என்றதன் பின், ஐவருட் படப் புகழ்ந்த அவரும் பிறரும் நிற் புகழ்ந் தேத்த என்றது, குறுநில மன்னராகிய ஐம்பெரு வேளிரும் பெரு வேந்தராகிய பிறரும் நின்னைப் புகழ்ந்து வாழ்த்த என்றவாறும். இவற்ருற் கோசரும் கோசர் தலைவனுகிய மாறனும் பாண்டியர்க்குத்

துப்பாதல் நன்கு துணியலாம். இதனுலிவர் பாண்டிய ராற் சிறப்பிக்கப் பெற்று வாழ்ந்தது உய்த் துணரலாகும். மேலிம் மதுரைக் காஞ்சியுள், (507—510)

"மழையொழுக் கறாஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூ ரவையகம் விளங்க
நான் மொழிக் கோசர் தோன்றி யன்ன
தாமே எந் தோன்றிய நாற்பெருங் குழுவும்"

எனக்-கூறுதலான் மோகூர் மன்னனுகிய பழைய னுக்கும் கோசருக்கும் ஒரு தொடர்புண்மை புலப்படுவது இல்லையேல் இவன் மோகூரவையகம் விளங்கும் வண்ணம் இக் கோசர் சமயத்து வந்து தோன்ற வேண்டியது இல்லையா மென்க. இத் தொடர்பு அவ்வரசற்கும் இக் கோசர்க்கு முள்ள குடிப் பிறப் பொற்றுமையே ஆமெனின் நன்கு பொருந்தும். உற்றுழி யுதவுவேம் என்று தம்மினத்தவனை மோகூர் மன்னன் பழையனுக் குரைத்த வண்ணம் அவன் அவையகம் விளங்க வந்து தோன்றி உதவியதனையே இது குறிப்ப தென்று நன் குணரலாம். இவ்வுதவி மோரியர் தென்றிசையில் வடுகரை முன்னுறவிட்டுப் படை யெடுத்து வந்த போது மோகூர் அவர்க்குப் பணியாமல் எதிர்த்து நின்ற நிலையில் அம் மோகூர்க்குத் துணையாக அவர் ஆலம்பலத்துச் சமயத்துத் தோன்றிப் பகைப் படையைச் சிதைத்த தனையே குறிப்ப தென்பது,

"பறைபடப் பணில மார்ப்ப விறை கொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே" (குறுந். 15) எனவும்,

"வெல் கொடித், துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்

புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்கு வெள்ளருவிய வறைவா யும்பர்'' (அகம். 251)
எனவும்,

''முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு
விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்
தொண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த
அறையிறந் தவரோ சென்றனர்'' (அகம். 281) எனவும்,

வருவனவற்றான் அறியலாம். இவற்றுள் வடுகர் முன்னுற மோரியர் தென்றிசை மாதிர முன்னிய வரவு என்றது, மோரியர் வடுகரை முன்னிட்டுக் கொண்டு தென்றிசையி னிலமுள்ள வரையும் வென்று கொள்ள எண்ணிப் படையெடுத்து வந்த வரவு என்றவாறாம்; இவ் வரலாறு அவர் படை யெடுத்தபோது தந்தேர் இனிது செல்லற்கு மலையை யறுத்து வழிகண்டு வந்தனர் என்றும், அப்போது மோகூர் அவர்க்குப் பணியாது எதிர்த்து நின்ற தென்றும், அங்ஙனம் எதிர்த்து நின்ற நிலையின் மோகூர் தளராதபடி, கோசர் தாம் முன் உற்றுழி யுதவுவதாகச் சொல்லிய வண்ணம் அம்மோகூர் ஆலம் பலத்து இன்னிசை முரச மிரங்கத் தோன்றிப் பாசறை கொண்டு பகைப் படையைச் சிதைத்தனரென்றும் அறியலாம். உற்றுழியுதவுவதாகச் சொல்லியது ''கோசர் நன்மொழி போன்று வாயாகின்றே'' என்பதனுற் பெறப்பட்டது. தெம்முனை சிதைத்த ஞான்றை என்பதனல் மோகூர்க்கும் கோசர்க்கும் பொதுவாின பகைப் படை மோரியர் படை என்று கருதப் பட்டது. மோகூர் பணியாமல் இருந்தது இயல்பாகிய வீரத்தானும் தம்மினத்தவராய கோசர் சமயத்து வந்து உதவுவார் என்ற துணிபானும் என்று நினையலாம். ''தொன் மூதாலத்துப் பொதியில்'' என்பவற்றால் பழைய ஆல மரத்தின் அரிய கிளைகளினிழலிலுள்ள அம்பலம் என்று கொள்ளப்பட்டு அதுவே ஆலம்பல மென்னப் பட்டது. இம் மோகூரும் அதனை அடுத்து ஆலம்பலமும் கள்ளக் குறிச்சிச் சேகரத்து இன்று முள்ளனவாதல் நோக்கிக் கொள்க. மோரியர் குறைத்த குன்றத்து அறைவாய்

கள்ளக்குறிச்சி மலையிடை வழியாரும்; அல்லது செங்கண் மமராஅத்து அமைவாய் வழியாகு மென்க. இவவூரே செங்குட்டுவன் பொருது வென்றதா மென்பதும், கோசர் வந்து தவியதாகு மென்பதும், குட்டுவனஞ்சூர், கோசர் பாடி என்னும் ஊர்கள் இம் மோகூர்ப் பக்கத்துண்மை யாண்டுயித் துணரலாம். மோகூரை யடுத்துள்ள ஆலம்பலம் என்ற சிற்றூரே கோசர் தோன்றிய மூதாலத்துப் பொதியிலாகு மென்க. பொதியில் அம்பலமென்பது தமிழ் வழக்கு. இம் மோகூரிற் பெரிய அகன்ற பாழ் மேடு உள்ள நிலமே பழைய அரண்மனை இருந்த இடமாகு மென்பர்.

மோரியனை சந்திர குப்தன் மகிஷ மண்டலத்துச் சிரவண வேள் குளத்து வந்து தங்கியது அப்பக்கத்துச் சாசனங்களானும் பழைய சரிதங்களானுங் கேட்கப்படுதலான், ஆண்டு அவனுடன் வந்த மோரியர் வழியினர் பின்னுந் தென்றிசையிற் செல்லப் படை யெடுத்து வருதல் கூடு மென்றுணர்க. இம் மோரியர் வட நாட்டுப் படை யெடுத்த போது இமையத்து வழியை உண்டாக்கியது,

> "வென்வேல், விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்,
> திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
> வுலக விடைகழி யறைவாய் நிலைஇய
> மலர்வாய் மண்டிலத் தன்ன நாளும்
> பலர்புர வெதிர்ந்த வறத்துறை நின்னே" (175)

என்னும் புறப் பாட்டா னறியக் கிடப்பது. இத் தென்னாட்டு இவர் தேர் வரவிற்குக் குறைத்த அறைவாய் அதனின் வேறென் றெண்ணுக; புறப் பாட்டின் மோரியர் வடக்கட் குறைத்த உலக விடைகழியாகிய அறைவாயிற், சூரிய மண்டலம் எப்போதும் ஒரு பெற்றியாய் நிலையும் என்பதனன் அது வேறுதல் நன்கு தெளியலாம். புறப் பாட்டுரை காரரும் இந் நிகழ்ச்சி வடக்கண் வெள்ளிமலைக் கப்பால் வைத்துக் கூறுதல் காண்க. இம் மோகூர் மன்னன் பழையன், வேம்பினைக் காவன்

மரமாகப் போற்றியதும், இவன் பாண்டியர்க்குத் துப் பாதலான், அவன் மாலை யாதல் கருதி யென்றுய்த் துணரலாம். குறுநில மன்னனை தேர்வண் மலையன் சோழர்க்குத் துப்பாதல் பற்றி, புலிப் பொறி பொறித்த எயிலுடையனை மாற் போல்வது இஃதென்க, இதனை,

"விடர்ப்புலி பொறித்த கோட்டைச் சுடர்ப்பூட்
சுரும்பார் கண்ணிப் பெரும் பெயர் நும்முன்" (புறம். 174)

எனத் தேர்வண் மலையன் பாடப் பெறுதலான் உணர்க. முன் கோசர் தலைவனைத் துணியப்பட்ட மாறன், இம் மோகூர் மன்னன் பழையன் மகன் ஆவன் என்று ஊகிக்கின்றேன். பாண்டியற்கு நட்பா யின தன்மையாற் பழையன் தன் மகனுக்கு மாறன் என்ற பெயரை இட்டு வழங்கலாயினன் எனக் கருதல் தகும். பழையன் மாறன் என்ற பெயர் பாண்டியற்கு வழங்கல் அகத்தில்,

"நெடுந்தேர் இழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகிற் கூட லாங்கண்" (346)

என வருதலா னறியப்படும். இதனால் மதுரைக் காஞ்சியிற் கோசர் தலைவனைக் கொள்ளப்பட்ட மாறனா கிய குறுநில மன்னன் வரலாறு ஒருவா றுணரலாம். மோகூர்ப் பழையனைச் செங்குட்டுவன் வென்று அவன் வேம்பு முதறடித்த செய்தி கூறிய பதிற்றுப் பத்துள் (49)

"வெல்போர் வேந்தரும் வேளிரு மொன்று மொழிந்து
மொய்வளஞ் செருக்கி மொசிந்துவரு மோகூர்
வலம்படு குழூஉ நிலை யதிர மண்டி
நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர்
நிறம்படு குருதி நிலம் படர்ந்தோடி
மழை நாட் புனலி னவற்பரந் தொழுக...
....
கருஞ்சினை விறல்வேம் பறுத்த, குட்டுவன்"

எனக் கூறியிருப்பது காணலாம். இதன் கண் "வேந்தரும் வேளிரும் ஒன்று மொழிந்து வலம்படு குழூஉ நிலை" என்பது வேந்தரும் வேளிருங் குழுற்று வென்றி

யெய்தற்குரிய கூட்டுற வென்ற வாறும். குழூஉநிலை என்பது தகைநிலை எனவும் வழங்கப்படும். பதிற்றுப் பத்து (76,2) பார்க்க. "ஒன்று மொழிந்து வலம்படு குழூஉநிலை" என்பது பழைய கோச முறையில் இருதிறத்தாரும் ஒன்றுதலைக் குறிக்குமென் றெண்ணுகின்றேன். இவ் வுண்மை இவ் வீரரை "நெய்த் தோர் தொட்ட செங்கை மறவர்" என்றதனலறியலாகும். ஈண்டு உரைகாரர் "பகைவருடைய உடலில் தாங்கள் எறிந்த வேல் முதலிய கருவிகளைப் பறிக்கின்ற காலத்து அவருடலுக்கு குருதியை அளைந்து சிவந்தகையையுடைய மறவர் எ.று." என வுரைத்தார்; இங்ஙனங் கூறியவர் "மறவரது குருதியெனக்கூட்டுக" என்றும் விளக்கினார். இதனால் இம் மறவர் மேற் கூறிய குழூஉநிலை மறவர் என்பதும், இவர் பழையன் படையின ரென்பதும் உணரலாம். உரைகாரர் தொட்ட என்னும் அரிய சொல் வழக்கினைச் சிறிது சிந்தித் திருப்பின் இங்ஙனங் கூறியிடர்ப்படா ரென்க. தொடுதல் என்பது சூள் செய்து சபத மொழிதற்குக் கூறும் சான்றோர் வழக்காதல் கலித்தொகையில்,

"கோனடி தொட்டேன்" (மருதம். 29) எனவும்
"நின்னடி தொடுகடனிது" (சிலப். 12, வேட்டுவரி) எனவும்
"தொட்டு விடுத்தேன்" (சிந்தாமணி. 1876) எனவும்

வருமிடங்களிற் கண்டு கொள்க.

இந் நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர் கோசராமென்பது மேலிச் செங்குட்டுவன் கடம்பரை வென்றுக் கடலோடுழந்த செய்தி கூறிய விடத்து (பதிற். 41) "வஞ்சின முடித்த வொன்று மொழி மறவர், முரசுடைப் பெருஞ்சமத் தரசு படக் கடந்து" எனக் கூறுதலா னறியலாகும். ஈண்டு ஒன்று மொழி மறவர் என்றது துளுநாட்டுள்ள ஒன்று மொழிக் கோசரை என்பது நன்கு பொருந்துதல் காண்க.

"வத்தவன் மறவர் மொய்த்தன" (பெருங்கதை. மகத. 17. 250) என வருதலான் ஈண்டு மறவர் வீரராதல் உணர்க.

இதனால் நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர் என்றதற்குப் போரினை வெல்லற்கு ஒன்று மொழிந்து ஒரு குழூஉநிலையாய்த் திரண்டு உதிரத்தைத் தொட்டுச் சூளுற்ற செங்கை வீரர் என்பது பொருளாமென்க. இது இக் கோசரது கோசமுறையினைக் குறித்த தென்று நினையலாம். மோகூர்க்கும் கோசர்க்குமுள்ள தொடர்பு முன்னரே நன்கு விளக்கப் பட்டதனால், ஈண்டு மோகூர்க்குத் துணையாய் நின்ற மறவர் அவர் தாம் என்பது நெய்த்தோர் தொட்ட செங்கை யாற்றெரிய நிற்பது நோக்கிக் கொள்க. பாண்டியர்க்குத் துணையாயினாரும் கோசர் ஆதல் முன்னரே காட்டப் பட்டது. இப் பாண்டியர்க்கு வினைவலனாய் அவன் படைத்தலைமை யெய்தியவன் அதியன் (அதிகன் எனவும் வழங்கும்) என்பானொருவனுண்டு. இதனைக்,

> "கூகைக் கோழி வாகைப் பறந்தலை
> பசும்பூட் பாண்டியன் வினைவ லதிகன்
> களிறொடு பட்ட ஞான்றை
> யொளிறு வாட் கொங்க ரார்ப்பினும் பெரிதே" (குறுந். 393).

என வருதலா னறியலாம். இவ் வதிகன் வேங்கை சேர்ந்த வெற்பில் இருந்தவன் என்பதும் பசும் பூட் பாண்டியன் படைத்தலைவ னென்பதும் கோசன் என்பதும் இரவலர் உள்ளியது பலகும வளளன்மைய னென்பதும்,

> "வாய்மொழி
> நல்லிசை தரூஉ மிரவலர்க் குள்ளிய
> நசைபிழைப் பறியாக் கழறொடி யதியன்
> கோளற வறியாப் பயங்கெழு பலவின்
> வேங்கை சேர்ந்த வெற்பகம் பொலிய
> வில்கெழு தானைப் பசும்பூட் பாண்டியன்
> களிறணி வெல்கொடி கடுப்பக் காண்வர
> வொளிறுவன விழிதரு முயர்ந்து தோன்றருவி" (அகம். 162)

என்பதனாலறியப் படுவனவாம். வாய்மொழி நல்லிசை தரூஉம் அதியன் என்றது, இவன் கோசர் குலத்துக்குச் சிறந்த வாய்மொழியால் இசை தருதல் பற்றி யென்று கொள்ளத்தகும். இரவலர் நசை பிழைப்பறியா அதியன்

என்றதனுல் இவன் கொடை மேன்மை அறியலாகும். இவன் வேங்கை சேர்ந்த வெற்பகத்துப் பசும்பூட் பாண்டியன் கொடியிருப்பது கூறியதனுலும், குறுந்தொகையில் (373) "பசும் பூட் பாண்டியன் வினைவல் அதியன்" என்றதனுலும், இவன் பாண்டியன் படை முதலியாதல் தெளியலாம்.

"ஆடுநடைப் பொலிந்த புகற்சியினுடு
அள்ளனைப் பணித்த வதியன் பின்றை
வள்ளுயிர் மாக்கிணை கண்ணவிந் தாங்கு (அகம். 325)

என வருதலான், இவன், நாட்டைக் கொள்ளை கொண்ட அள்ளன் என்பவனைச் சிறைப்படுத்தினுன் என்பதும், இவன் இறந்ததன் பின் பாணர் கிணைப் பறை கண்ணவிந்தன என்பதும், அறியலாகும். அள்ளன் என்பவன் அன்னுரிற் பாண்டியற்குப் பகையாய்க் குறும்பு செய்திருந்தவனெருவன் ஆவன், இவன் அள்ளி எனவும் வழங்கப்படுவன்.

"செழியன் பிண்ட னெல்லி னள்ளூர்" (அகம். 46)

என்பதனுல் இவ்வூர் பாண்டியருடைய நாட்டதாதல் அறிக. ஈண்டுப் பழைய வுரைகாரர் "அள்ளூர்—அள்ளியூர்" என விளக்கியதனுன் இவ்வுண்மை யுணரப்படும். அதியன் பாண்டியன் படை முதலியாதலாற் பாண்டியற்குப் பகையாய்க் குறும்பு செய்த இவனை அதியன் பிணித்தனன் என்று துணியப்படும். இவ்வுண்மை அறியப் படாமையான் ஈண்டு "புகற்சியினுடு, கொள்ளனைப் பிணித்த வதியன் பின்றை" எனப் பிழைபடப் படிக்கப்பட்ட தென்க. பாண்டியன் படை முதலியாகிய இவ் வதிகன் களிறெருடுபட்டது, கூகைக் கோழி வாகைப் பறந்தலையி லென்பது மேற்காட்டிய 393-ஆம் குறுந்தொகைப் பாட்டாலறியப்படும். கூகைக் கோழியார் என்பவர் ஓர் கல்விசைப் புலவரென்பதும் இவர்,

"முதுமரப் பொத்திற் கதுமென வியம்பும்
கூகைக் கோழி யானுத்
தாழிய பெருங்கா டெய்திய ஞான்றே" (புறம். 364)

எனப்பாடியதனல் இப் பெயர் பெற்ற ரென்பதும் கற்ற ரறிவர், இப் புலவர்க் குரிய ஊராகிய **வாகை,** எயினன் என் பவனுடைய தென்பது "என்றும் வண்கை யெயினன் வாகையன்ன விவணலம்' (புறம். 351)
என்பதனலறியப்படும். எயினன் ஊராகிய வாகையில் அதியன் களிறெருடுபட்டான் என்றலால், இவ்வதியன் வாகையிலுள்ள எயினன் மேற்படையெடுத்துப் போய் ஆண்டுப் பொருத போரில் எயினனைற் பட்டான் என்று உய்த்துணரலாகும். எயினன் வேளிருள் ஒருவன் என்பது,

> "நுண்கோ லகவுநர் வேண்டின் வெண்கோட்,
> டன்னல் யானை யீயும் வண்மகிழ்
> வெளியன் வேண்மா னைஅ யெயினன்"

(அகம். 208)

என வருதலானறியப்பட்டது ; "என்றும் வண்கை யெயினன்" என்ற புறப்பாட்டுத் தொடரும் "வண்மை யெயினன்" (அகம். 181.) என்பதும், "யானையீயும் வண் மகிழ் எயினன்" என்பதும் தம்முளொத்து விளங்கி, இவன் கொடைச் சிறப்புக் கூறுதல் காண்க. இவ் வெயினன் ஏழில் மலை நன்னனுக்குத் துணையாய் அவன் படைத்தலை நின்றவன் என்பது மேல் விளக்கப்படும்.

இவற்றாற் பாண்டியன் படை முதலியான கோசனைகிய அதகன், நன்னன் படைத்துணையாகிய வேண்மானெயினனுடைய வாகையூரில் இவ் வெயினனைலிறந்தானென்று கொள்ளப்படும். இதனைற் கோசர்க்கும் வேளிர்க்குமுள்ள பகைமை உய்த்துணரலாகும். இவ்வாறு தன்னினத்தவனும் பெரும் படைவீரனுமான அதியன் பட்டது பொருது, **கோசனைகிய மிஞிலி** என்பவன் அவனைக் கொன்ற எயினனைப் பேய்க்கு ஊட்டுவதாக வஞ்சினஞ் செய்து, பாழிப் பறந்தலையில் அவனைக் கொன்றனன். அதகனும் மிஞிலியும் நெருங்கிய உறவினர் ஆவர் போலும், இவ்வுண்மை.......

> "காதலி
> முறையின் வழாஅது தாற்றிப் பெற்ற
> கறையடி யானை நன்னன் பாழி

ஊட்டரு மரபி னஞ்சுவரு பேஎய்க்
கூட்டெதிர் கொண்ட வாய்மொழிமிஞிலி
புள்ளிற் கேம மாகிய பெரும்பெயர்
வெள்ளத் தானை யதிகற் கொன்றுவந்
தொள்வா ளமலை யாடிய ஞாட்பின்'' (அகம். 142)

என்பதனால் நன்கறியலாகும்.

''யாழிசை மறுகிற் பாழி யாங்கண்,
அஞ்ச லென்ற வாஅ யெயினன்,
இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
தன்னுயிர் கொடுத் தனன், சொல்லியது. (அகம். 396)

என வருதலான், எயினன் மிஞிலியொடு தாக்கிப் பாழியில் உயிர் கொடுத்தனன் என்பது நன்கறியப் படுதலானும், அதகன் களிறொடுபட்டது வாகைப் பறந்தலையில் (குறுந். 393) என்று தெளியப்பட்டதனானும், ஈண்டு ''வெள்ளத் தானை யதகற் கொன்று'' என்ற பாடம் பொருந்தாதென்றும் ''எயினற் கொன்று'' என்ற பாடமே பொருந்துவதென்றும் நன்குணர்க. எயினனுடைய வூராகிய வாகையிற் களிறொடுபட்ட அதகன், ஞிமிலியாற் பாழியிற் பட்டானென்பது அசம்பாவிதமென்க, பாழியில் ஞிமிலியால் எயினன்பட்டது,

''வெளியன் வேண்மா னாஅ யெயினன்
அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
இழையணி யானை யியறேர் மிஞிலியொடு
நண்பகலுற்ற செருவிற் புண்கூர்ந்து
ஒள்வாள் மயங்க வீழ்ந்தென எனவும்'' (அகம். 208)
''பாழியாங்கண், அஞ்சலென்ற வாஅயெயினன்
மிஞிலியொடு தாக்கித் தன்னுயிர் கொடுத்தனன்''
(அகம். 396) எனவும்.

வரும் அகப்பாட்டுக்களால் நன்கு தெளியப்பட்டதாம். அன்றியும் ''வாய்மொழி ஞிமிலி'' (அகம். 142) என்பதனால் ஞிமிலியும் ''வாய்மொழி நல்லிசை தருஉ மதிகன்'' (அகம். 162) என்பதனால் அதகனும், வாய்மொழியாற் சிறந்த கோசராதலான் அவர் தம்முட் பொருதார் என்று கொள்வது பொருந்ாதே யாகுமென்க. அதியன் வாகையிற் களிறொடுபட்டதற்குக்

கொங்கரார்த்தது குறுந் தொகையிற் கூறினர்; அதியன் கோசன் ஆதலான் அவன் தம் கொங்கு நாட்டு வலியாற் புக்குப் பாண்டியன் துணைவலியாற் குறும்பு செய்தலைப் பொருத கொங்கர், அவனிறந்ததற்கு மகிழ்ந்தார்த்தார் என்று துணிக. "கொங்கிளங்கோசர்" என்ற சிலப்பதிகாரத் தொடரை ஈண்டைக்கு நினைக்க. கொங்கிற்புக்க கோசர் இழிவு கொங்கர்க்கு மகிழ்ச்சியே விளைக்கு மென்க. மேற்காட்டிய 142 ஆம் அகப்பாட்டில் "காதலி முறையின் வழாஅதாற்றிப் பெற்ற பாழிப்பேய்க்கு ஊட் டெதிர் கொண்ட ஞிமிலி" என்க. காதலியென்பாள் மிஞிலியினுடைய மனைவி என்க. அவள் ஒரு பேய்த் தெய்வத்திற்குச் செய்ய வேண்டிய முறைமையின் வழி பட்டு வசமாக்கிய பேயென்று கொள்க. அப்பேய் பாழி யின் கணுள்ளதாகும். "அணங்குடை வரைப்பிற் பாழி" (அகம். 372) என வருதல் காண்க. ஊட்டரு மரபினஞ்சு வரு பேய் என்றது போரில் எதிர்ந்த வீரரைக் கொன்று அவர் உதிரத்தை யூட்டினல்லது வேறு வகையாக ஊட்டற் கருமையால், அச்சம் வருதலையுடைய பேய்த் தெய்வம் என்றவாறு. தன் காதலி வழிபட்டு வசஞ் செய்து கொண்டதனாலும் இப்பேய்க்கு வேள் எயினனை ஊட்டுவதாக மிஞிலி வஞ்சினஞ் செய்தனன் என்க. பேய்க்கு ஊட்டு எதிர்கொண்ட மிஞிலி என்றது பேய்க்கு ஊட்டுதலை எதிர்ந்தேற்றுக் கொண்ட மிஞிலி. எ. று. வாய்மொழி ஞிமிலி என்றது, அங்ஙனஞ் சொல்லியது மாறுமைக்குரிய வாய் மொழியை விரதமாக் கொண்ட ஞிமிலி. எ. று. காதலி பெற்ற நன்னன் பாழிப் பேய்க்கு என்க. நன்னன் பாழி என்றதனால் இப்பாழி மிஞிலிக்குரிய தன்றென்றவாறும்.

இங்ஙனம் கோசனாகிய மிஞிலி தன்னினத் தவனாகிய அதிகனைக்கொன்ற வேண்மானாகிய எயினனைத் தன் காதலி வழிபட்டு வசஞ் செய்தநன்னன் பாழியிலுள்ள பேய்க்கு ஊட்டுவதாக வஞ்சின மொழிந்து மேற்கொண்ட நிலையில் மேனிகழ்ந்தன இனி, ஆராயப்படும்.

கல்லாடனார் அகப்பாட்டில் (113)

''நன்றல் காலையு நட்பிற் கோடார்
சென்று வழிப்படூஉந் திரிபில் சூழ்ச்சியிற்
புன்றலை மடப்பிடி யகவுநர் பெருமகன்
அமர்வீசு வண்மகிழ் அகுதைப் போற்றிக்
காப்புக்கைந் நிறுத்த பல்வேற கோசர்
இளங்கட் கமழு நெய்தலஞ் செறுவின்
வளங்கெழு நன்னா டன்ன வென்றோள்;''

எனக்கூறுதலான, அகுதை எனபவன் கோசர் தலைவன் என்பது புலனுவது. ஈண்டு ''அகுதைப் போற்றிக் காப்புக்கைந் நிறுத்த பல்வேற் கோசர்'' என்பது அகுதையைப் பாதுகாத்துத் தங்காவலைத் தங்கையிலே நிலைபெறுவித்த பல்வேற் படையையுடைய கோசர் என்று பொருள் படுதல் காண்க. அகுதையைப் பாதுகாத்தபடி என்னையெனிற் கூறுவேன். நன்னன் தானே கனிநின்றற்கென ஆற்றோரத்து அருமையின் ஓர் மாமரம் வளர்த்துப் போற்றினுன். அஃதொரு காயே காய்த்தது. முற்றிப் பெருங் காயான நிலையில் அக்காய் ஆற்றிலுதிர்ந்தது. அதனை ஆற்றிற் குளித்த ஓர் பெண் எடுத்துத் தின்றனள். இத்தவற்றிற்கு அவளூற்றார் பல் களிறும் பெண்ணின் நிறையான பொற் பாவையும் கொடுக்கவுங் கொள்ளானுய் அவளைக் கொலை புரிந்தான். இவ்வரலாற்றைக் குறுந்தொகையுள்,

''மண்ணிய சென்ற வொண்ணுதலரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் தப்பற்
கொன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை
பொன் செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரயத்துச் செலீஇயரோ வன்னை'' (292)

எனப்பரணர் பாடுதலானறியலாம். இப்பசுங்காய் தின்றவள் கோசர் மகள் என்று நினையத்தகும். இக் கொடுங் கொலையைப் பொருத கோசர் நன்னன் மாமரமே இக்கொடுங் கொலைக்குக் காரணமென்று கொண்டு அதனையழித்தற்கு ஒருவன்கட் சூழ்ச்சி செய்தனர். அச் சூழ்ச்சியாவது தங்கள் குலத் தலைவனை அகுதையை அகவன் மகளிர்க்குப் பெரும் பிடிப்பரிசில் தரும்படி

செய்து, அவற்றை அம்மகளிரைக் கொண்டு நன்னன் தோட்டத்து அம்மாமர முதலாகக் கட்டச் செய்தனர். மாமரத்திற் கட்டிய பிடிகள் தங்கள் தலையில் மண்ணைப் பெய்தற்குத் தரையைப் பறித்த நிலையில் மாமரம் வேரோடு ஆற்றிற் சாய்ந்தது. அதனை நாட்டில் உள்ளாரெல்லாம் விறகிற் கொடித்துப் போக மரமேயில்லையாயழிந்தது. இச்சூழ்ச்சிக்குடன்பட்டவனை அகுதை மேல், நன்னன் சினந்து படையெடுத்த வளவில் அவனைப் போற்றித் தம் நாட்டைக் காத்த கோசர் சிறப்பினையே 113-ஆம் அகப்பாட்டுக் குறிப்பதென்பது பின்வரு மேற்கோள்களான் நன்குணரலாம். அவை வருமாறு:—

> "நன்னன், நறுமா கொன்று நாட்டிற் போகிய
> ஒன்றுமொழிக் கோசர் போல
> வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே"
> "இன்கடுங் கள்ளி னகுதை தந்த
> வெண்கடைச் சிறுகோ லகவன் மகளிர்
> மடப்பிடிப் பரிசின் மாளப்
> பிறிதொன்று குறித்தவ னெடும்புற நிலையே
>
> (குறு. 298)

இவற்றுட் கோசர் வன்கட் சூழ்ச்சியின்ன தென்பது, அகுதை மடப்பிடிப் பரிசில் பிறிதொன்று குறித்ததனால் அறியக் கிடப்பது காண்க. ஒரு காய் தின்றதப்பற்கு ஒரு மகளைக் கொலை செய்த நன்னன் மரமேயில்லையாகச் செய்யும் இவ்வகவன் மகளிரை என் செய்வனென்பது துணிய இச் சூழ்ச்சி செய்தனர் ஆவர். நன்னன் மாமரத்துப் புனறரு பசுங்காய் தின்று கொலையுண்ட ஒண்ணுதலரிவை கோசர் மகளாதலாற் கோசர் அச்சின மாறாது அம்மரத்தை அழித்துத் தொலைக்க ஒரு வன்கட் சூழ்ச்சி செய்தனர் என்று நினைக்கப்படும்.

> "துறைகு கட் சிறுகோல் வணங்கிறை மகளிரோ
> டகவுநர்ப் புரந்த அன்பிற் கழறொடி
> நறவு மகிழிருக்கை நன்னன் வேண்மான்"
>
> (அகம். 97)

என்பதனாலும்

"பாடுநர் செலினே
சூழாது சுரக்கும் நன்னன்" (அகம். 349)

என்பதனாலும், இந் நன்னன் இசைவல்ல அகவன் மகளிரன்பினால் அவரை வருத்தாது தான் முன் செய்த கொடுமையை உணர்வன் என்று இவ்வாறு ஓர் சூழ்ச்சி செய்தனர் போலும். இவற்றால் இவ் வகுதை கோசர் குடியினனாவன் என்பது தெள்ளிதாதல் காண்க. பரிசில் பிறிதொன்று குறித்த தென்று பாடியவரும், நறுமா கொன்று நாட்டிற் போக்கிய கோசர் போலவன் கட் சூழ்ச்சியும் வேண்டும் என்று பாடியவரும், பரண ரென்னும் ஒரே புலவராதலால் இவ்விரண்டையு மியைத்து நறுமா கொன்ற சூழ்ச்சி வரலாறே அவர் கூறுவதாகத் துணியப்பட்டதென்க "சென்றுவழிப்படூஉ உத்திரியில் சூழ்ச்சியிற்—கோசர்" (அகம். 113) என்று கோசரைச்சிறப்பிப்பதுங் காண்க. இங்ஙனமல்லாக்கால் அகுதை மடப் பிடிப் பரிசில் பிறிதொன்று குறித்தற்குத் தக்க காரணம் கூற இயலாமை ஆராய்ந்து தெரிக. கோசர் தந்தலைவனை அகுதையைப் பாதுகாக்க வேண்டிய இன்றியமையாமையும் இதனாலெளிதி லுணரலாகும். இவன் கோசன் என்பது இன்னும் ஒருவகையானும் துணியலாம். மதுரைப் பேராலவாயார் பாடிய அகப்பாட்டில்,

"வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
யிழையணி யானை யியறேர் மிஞிலியொடு
நண்பகலுற்ற செருவிற் புண்கூர்ந்
தொள் வாண் மயங்கமர் வீழ்ந்தெனப் புள்ளொருங்
கங்கண் விசும்பின் விளங்கும் ஞாயிற்
றொண் கதிர் தெறாமை சிறகரிற் கோலி
நிழல்செய் துழறல் காணேன் யானெனப்
படுகளங் காண்டல் செல்லான் சினஞ்சிறந்
துருவினை நன்ன னருளான் கரப்பப்
பெருவிதுப் புற்ற பல்வேண் மகளிர்
குரூஉப்பூம் பைந்தா ரருக்கிய பூசல்
வசைவிடக் கடக்கும் வயங்குபெருந் தானை
அகுதை களைதந் தாங்கு" (208)

என்னும் பகுதியால் வேள்குடியினனாகிய வெளியன் வேண்மானா ஆயெயின னென்பவன், நன்னன் வேண்மானுடைய பாழிப் பறந்தலையில் மிஞிலி யென்பவனொடு பொருது புண்பட்டு வீழ்ந்ததும், உறவினனாகிய வேள் நன்னன் அருளானாகி அப் போர்க்களத்தைக் காண்டலுஞ் செய்யாது கரந்தனனாக, அங்கு வேள் மகளிரழுத பூசலை இவ்வருத்தத்தை களைந்தனன் என்று கூறப்பட்டுள்ளது காணலாம். எயினன் வேள் என்பது வெளியன் வேண்மானென அவனை விசேடித்ததனாலறியலாம். நன்னன் வேளென்பது,

"நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர்" (அகம். 97)

என்பதனாலுணரப்படும். இப்பாழிப் போர் வேளிர்க்குங் கோசர்க்கும் நிகழ்ந்ததாகும். 142-ஆம் அகப்பாட்டில் வேள் மாண் எயினனொடு பொருத மிஞிலியை வாய்மொழி மிஞிலியென விசேடித்ததனாலும் வேளொடு பொருதலாலும் இது துணியப்படும். கோ வாய்மொழியால் இசை பெற்றவரென்பது,

"வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர்" (அகம். 205)
கோசர் நன்மொழி போல, வாயாகின்றே (குறுந். 15)
"மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்" (அகம். 15)
எனவும்,
"ஒன்று மொழிக் கோசர்" (அகம். 196- குறுந். 73)

எனவும் வருதலான் அறியப்பட்டதாதல் முன்னரே காட்டினேன்.

"கொடுந்தேர்ப்
பொலம்பூ ணன்னன் புன்னாடு கடிந்தென
யாழிசை மறுகிற் பாழி யாங்க
ணஞ்ச லென்ற வாஅ யெயின
னிகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
தன்னுயி ரொடுத்தனன் சொல்லியது (அகம். 396)

என்பதனால், நன்னன் வேண்மான் போர்க்கெழும் போது தனக்குப்புள் (சகுனம்) நாடு கடிந்தெனச் சொல்ல, அந்நிலையில் வேண்மானெயினன் அவனை

அஞ்சலென்று தேற்றி மிஞிலியொடு பொருது தன்னு யிரை அவனுக்காக வழங்கினன் என்று கூறுதல் காண லாம்.

"புள் ளோர்த்துப் படை யமைத்து (அகம். 207)
"புள்வாய்ப்பச் சொன்ன புலவற்கும்! (பு. வெ.)

என்பனவற்றாற் புள் சகுன நிமித்தமாதல் உணர்க. எயினன் அஞ்சலென்ன வேண்டியதற்குக் காரணமாகப் புள்நாடு கடிந்ததென்ற அச்சச் சொல், நன்னன் வாயி லுண்டாயதென்று தெரிந்து கொள்ளலாம். புள்ளுநாடு கடிந்தெனா என்ற பாடமும் உண்டெனினும் இதுவே பொருட் பொருத்தமாதல் உணர்க. இனிப் புன்னாடு கடிந்ததெனக் கொண்டு "புன்னாடு என்ற பெயருடைய நாட்டுப் பகுதி தன்னைக் கடிந்ததாக நன்னன் சொல்ல, அவனை அஞ்சலென்ற ஆஅயெயினன்" எனப் பொருள் கொள்ளினும் இழுக்காது. புன்னாடு சிறுகூற்றமாகக் கொள்க. புன்னாடு ஓரூர் என்று தாலமி கூறுவர்.

இங்ஙனம் தனக்காக உயிர்கொடுத்த எயினன் புண் பட்டு வீழ்ந்ததும் அவனைக் காண்டலுஞ் செய்யாது, நன் னன் வேண்மான் ஒளித்த அளவில், வேண்மகளிர், எயினன் வீழ்ந்தது பற்றியும் தங்கள் நன்னனைக் காணா மைபற்றியும், அழுது பெரும் பூசலிட, அக்களத்து வாய் மொழி மிஞிலிக்குத் துணையாய் வயங்கு பெருந்தானையுட னின்ற அகுதை அருளால் இரங்கி வேண்மகளிர் பூசலைக் களைந்தானென்று துணியத்தகும். பகைமையைப் பெண் டிர்பாற் கொள்ளாது அவர்க்குபகாரஞ் செய்த இவ்வ குதையின் அரிய செயலே ஈண்டும் புலவராற் பாராட்டப் பெற்றதென்க.

"பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா
லூராண்மை மற்றத னெஃகு" (குறள். 773)

என்ற திருக்குறளையும் அதற்குப் பரிமேலழகர் கூறிய உரையையு நோக்கி இவ்வரிய பண்பின் மேம்பா டுணர்க. எயினனையு நன்னனையுஞ் சார்ந்த வேண்மக ளிர் பூசலிடுவதற்குக் காரணம் எயினன் வீழ்ந்ததும்

நன்னன் கரந்ததுமே யாகாது, நன்னன் பெண் கொலை புரிந்தவனாதலானும், போரிற் பகைத்தவருடைய மகளிர் கூந்தலைக் கயிறு திரித்தவன் ஆதலானும், பகைத் தவர் தம்மையும் அவ்வாறு என்ன என்ன செய்வரோ என்னும் அச்சமும் ஆம் என்க. நன்னன் பகைத்தவர். மகளிர் கூந்தலைக் கயிறு திரித்த செய்தி,

> "வேந்த ரோட்டிய வேந்து வேனன்னன்
> கூந்தன் முரற்சி யிற் கொடிதே" (270)

என்ற நற்றிணையானறியப்படும். நன்னன் பகைவர் மகளிர்க்குச் செய்த கொடுமைகளைச் செய்யாது அகுதை வேண்மகளிர் பூசல் களைந்ததுவே ஈண்டுக் கூறப்பட்டதென்க. அகுதையும் நன்னனும் பகைத்த நிலையில் இருவரும் எதிர்பொர நின்ற களத்து, நன்னன் அச்சத்தால் எதிர்வராமையால், அகுதையைச் சார்ந்த கோசனாகிய மிஞிலியும் நன்னனைச் சார்ந்த வேண்மான் எயினனும் முறற்பட‌ப் பொருத போது எயினன் புண் பட்டு வீழ்ந்ததும், புள்நாடு கடிந்ததெனப் போர்க்குப் புறப்படும் போதே அவசகுனங் கண்டஞ்சிய நன்னன், தன்னை அஞ்சலென்று தேற்றித் தனக்காக உயிர் கொடுத்த அவ்வெயினன் வீழ்ந்ததைக் காண்டலும் செய் யாது கரந்த இழிவையும், அக்களத்து நன்னனொடு பொருதற்கு நின்ற அகுதை பகைத்தவர் மகளிர்க்கு இரங்கியாற்றிய உயர்வையும், இந்த 208. ஆம் அகப்பாட் டுக் கூறுவதாக நன்கு துணியப்படுமென்க. அழுத மக ளிர்க்கு உறவினனாகிய வேள் நன்னன் அருளானாக,உற வினனல்லாது கோசனாய்ப் பகைவனாகிய அகுதை அந் நன்னனைச் சார்ந்த மகளிர் பூசல் களைந்தானெனப் பாராட்டியதாகக் கொள்க. இங்ஙனங் கொள்ளாக்கால் நன்னனை அஞ்சலென்றவாய்மொழி மிஞிலிக்கும் எயினற்கும் நிகழ்ந்த நன்னன் பாழிப் போரில், நெடுஞ் சேய்தாகிய கூடற்கட் பாண்டியன் என்று பிறர் நினைக் கின்ற அகுதை வருவதற்குக் காரணமே யில்லையாதல் ஆராய்ந்து கொள்க. கொண்கானத்தைச் சார்ந்துள்ள துளுநாட்டுக் கோசனாகிய அகுதைக்கும் நன்னனுக்கும்

மூண்ட பகைமை காரணமாகவே இப்போர் நிகழ்ந்த தென்று முன்னைய மேற்கோள்கள் கொண்டு துணிந்து கொள்க. இப் பாழிப் போரிலும் இவ் வகுதை பெருந் தானையொடு நின்றது,

"வசைவிடக் கடக்கும் வயங்கு பெருந்தானை அகுதை"
(அகம். 208)

எனக் கூறுதலான் அறியப்படும். இப்போரில் மிஞிலி எயினற் கொன்று தன் வஞ்சினத்தை நிறை வேற்றினன் என்று கொள்க. இப்போர் வென்றியால் "பாரத்துத் தலைவனை நன்னன்" (அகம். 152) என்பத னுற்றெளியப்பட்ட நன்னனுடைய பாரமென்னும் ஊர் மிஞிலி காப்பிலடங்கிற்று என்று தெரியலாம். இதனை நற்றிணையில்,

"வினையன்பின் வில்லோர் பெருமகன்,
பூந்தோள் யாப்பின் மிஞிலி காக்கும் பாரம்"
(265) எனக் கூறியதனலறிக.

இதன்கட் பூந்தோள்யாப்பு என்பது தோட்கவசம்.

இனி 'அகுதை கூடல்' (புறம்-)என அகுதைக்குக் கூடற் பதியைக் கூறியதன் காரணம் ஆராயப் படும். பாண்டியர் கோசரைப் பெருந்துப்பாகக் கொண்டவ ரென்பது மதுரைக் காஞ்சியுள்,

"கடந்தடு வாய்வா ளிளம்பல் கோசர்
இயனெறி மரபினின் வாய்மொழி கேட்பப்
பொலம்பூ ணைவ ருட்படப் புகழ்ந்த
மறமிகு சிறப்பிற் குறுநில மன்னர்
அவரும் பிறருந் துவன்றிப்
பொற்புவிளங்கு புகழவை நிற்புகழ்ந்தேத்த
....
மகிழ்ந்தினி யுறைமதி"

எனவருதலானறியப் பட்டதனல், இவ்வகுதை பாண் டியராற் சிறப் பெய்திய கோசருளொருவனெனின் நன்கு பொருந்து மென்க. வேள் நன்னன் கொண்கானத்தே கோசர் துளுநாடும் இருத்தலான் கோசனகிய அகுதை வேள் நன்னன் பாழிக்கு எய்துதல் கூடும். அகுதை கூடல்

(புறம். 347) எனக் கபிலர் பாடுதலான் அகுதை பாண்டியன் ருனென்றும், அவன் தன் படைத்தலைவனும் கோசனுமான அதகனை எயினன் கொன்றதனால் அவனைக் கொல்லற்கு ஞிமிலி யென்னுங்கோசன் றுணையாக நன்னன் பாழிக்குப் படை யெடுத்து வந்தானெனக் கொள்ளலா மெனிற் கூறுவேன். இங்ஙனங் கொள்ளின் "அகுதைப் போற்றிக் காப்புக் கைந் நிறுத்த பல்வேற் கோசர்" என்பதற்குப் பாண்டியனைப் போற்றித் தங் காவலை நிறுவிய கோசர் என்று பொருளாகும். அங்ஙனமாயின் அகுதையாகிய பாண்டியன் கூடலில் அகவன் மகளிர்க்குப் பிடிப்பரிசில் வழங்கினனென்று கருத வேண்டிவரும். கூடலிலீந்த இப்பிடிப் பரிசில் பிறிதொன்று குறித்துத் தந்தது நெடுஞ் சேய்மைக்கணிகழ்ந்ததாகும். இப்பிடிகளைக் கொண்டு கொண்கான நன்னன் ஊரில் மாமரத்தை அழித்து காட்டிற் போக்குவது பொருந்துமா, துளுநாட்டுள் அகுதை யீந்த பிடிகளைக் கொண்டு நன்னன் நறுமா கொன்றதாகக் கொள்வது பொருந்துமா என்றறிஞரே ஆராய்ந்து கொள்வாராகுக. "இன்கடுங் கள்ளினஃதை" என்ற குறுந்தொகைக்கேற்ப ":: நனைக்கள்ளின் மனைக் கோசர், தீந்தேறல் நறவு" மகிழ்ந்து (புறம். 396) எனவருவதுங் காண்க. இவ்வுண்மை தென்னிந்திய சிலா சாசனத்தொகுதி நான்கில் 388-ஆம் எண்ணிலுள்ள கருவூர்ப் பக்கத்துச் சிலையினுள்ள வட்டெழுத்துச் சாசனத்தில்,

> "ஸ்ரீ கூற்றருதை பொல்லி நிறுவன்
> களகார்த்தி கோசமுடைக் கோசமும்
> ஐம்பெருங்குழுவும் சங்கமும்,
> இவை காத்தானடி என் தலை மேலன"

எனவருதலான் வலியுறுதல் காண்க. கூற்றருதை என்பது கூற்ற குதை எனவும் கெல்லி நிறுவன் என்பது கொல்லி நிருபன் எனவும் கொள்ளலாம். பொறித்தார் பிழைப்பும் படித்தார் பிழைப்பும் இவையாகும். இதன்கட் களகார்த்தி கோச முடைக் கோசமென்பது கோசர் குலம் எனப் பொருள்படும் "வண் கோசன்....செருந்தை"

என வழங்கியது காண்க. இப்படியே "ஐம்பெருங்குழுவு மத்தி கோசமும்" எனவருதல் காண்க, (பெருங். வத்தவ 9-5).

கூடல் ஒன்றே கொண்டு அகுதையைப் பாண்டியனென்று துணிவது, "செருந்தை தன் தென்னு றந்தை" என்றது கொண்டு செருந்தையைச் சோழன் என்பதனை டொக்குமென்க. இவ்வாறே "தித்தனு றந்தை" என்பது கொண்டு வேண்மானை தித்தனைச் சோழர் குடியினனுக்கு வாருமுண்டு. இவ்வாறு கொள் வதனுலுண்டாகும் இடர்ப்பாடுகளைத் தித்தன் வரலாற் றுள் விளக்கினேன், ஆண்டுக் காண்க. அகுதை பாண்டி யனுகாது பாண்டியர் படைத்தலைவனுதலைப்பின் வருவன வற்ருனும் உணர்க.

"பொய்யாகியரோ" (233)

என்னும் புறப்பாட்டில் எவ்விமார்பிற்பட்ட விழுப்புண் பலவென விடியலில் இயம்பிய குரல்,

"பாவடி யானை பரிசிலர்க் கருகாச்
சீர்கெழு நோன்ருள் அகுதைகட் டோன்றிய
பொன்படு திகிரியிற் பொய்யாகியரோ"

எனக் கூறுதல் கற்ருரறிவர். இவ்விடத்துப் பழைய வுரைகாரர் "திகிரி என்றது திகிரி தைத்தது என்று பிறந்த வார்த்தையை; பொன் ஈண்டு இரும்பு" எனவுரைத் தார். இதனுல் அகுதை மார்பில் இரும்பினுலாய திகிரி தைத்ததென்று, முதனுட் பிறந்த வார்த்தை பொய்யா யினதென்றும், அதுபோல எவ்வி மார்பிற் புண் பல வென்று மறுநாள் விடியலிற் பிறந்த வார்த்தையும் பொய்யாகுக வென்றும் புலவர் வேண்டுவதாகக் கருத லாம். முன்னுளில் எவ்வியை எதிர்த்த படையிலுள்ள அகுதை திகிரியாற் புண்பட்டு வீழ்ந்தனன் என்றகுரல் எப்படிப் பொய்யாயிற்ருே, அப்படியே எவ்வி புண்பட்டு வீழ்ந்தனன் என்பதும் பொய்யாகுக என்று கருதியது தெளியலாம். எவ்விக்கும் தலையாலங்கானத்துட்செரு

வென்ற பசும் பூட்பாண்டியனுக்கும் நிகழ்ந்த போரிலேதா மென்பது,

"நீடூர் கிழவோன்
வாய்வா ளெவ்வி யேவன் மேவார்
நெடுமிடல் சாய்த்த பசும் பூண் (அகம். 266) எனவும்.
எவ்வி, புனலம் புதவின் மிழலையோடு
....
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித் தேர்ச்செழிய" (புறம். 24)

எனவும் வருதலான் அறியப்படும். இப்போரில் அகுதை புகுவது பாண்டியற்கு நட்புடைய கோசருட் சிறந்த வீரனாதல் பற்றி யென்று நினைத்தல் தகும். "இளம்பல் கோசர் நின் வாய்மொழி கேட்ப" (மதுரைக் காஞ்சி) என இப் பாண்டியனே மாங்குடி மருதனாராற் பாடப்படுதலான் இவ்வுண்மை யுணர்க. இப் போரிற் பசும் பூட்பாண்டியற்கு வினைவலபாங்கனாய்ப் படைத் துணையாய் நின்ற அகுதை, இகிரி பட்டு வீழ்ந்தானென்று முன்னாட் கூறியது பொய்யாயிற் றென்றலால் அகுதை இப் போரில் ஊறுபடாது நின்றது புலனாகும். இவன் தன் கோசர் படை கொண்டு பசும் பூட்பாண்டியனோடு வென்று கூடல் புக்கிருப்பது பொருத்தமேயாகும். பசும் பூட்பாண்டியன் தன்னூர் காத்தற் றொழிலைத்தன் படை வீரனாகிய இவ்வகுதையிடம் அவ்வமயம் நியமித்திருப்பன். அந் நிலையில் அவன் காவலினுள்ள கூடலை,

"மணநாறு மார்பின் மறப்போ ரகுதை
குண்டு நீர் வரைப்பிற் கூடல்" (புறம். 347)

எனக் கபிலர் பாடின ரென்று துணியலாம். இக்கபிலர் இங்ஙனம் பாடும் போதே பரணர் "செழியன் கூடல்" (அகம். 116) எனவும் பாடுதல் கண்டு இவ்வுண்மை யுணரலாம்.

"பசும் பூட் பாண்டியன்
பாடு பெறு சிறப்பிற் கூடல்" (அகம். 231) எனவும்.
"பசும் பூட் பாண்டியன்
பொன்மலி நெடுநகர்க் கூடல்" (அகம். 253)

எனவும் வருவன கொண்டு இவ்வுண்மை நோக்குக. ஒரே காலத்து இரு பாண்டியர் கூடலையாண்டாரெனல் சிறிதும் பொருந்தாமையுணர்க. தொல்காப்பியனார்,

"ஊரும் பெயரு முடைத் தொழிற் கருவியும்
யாருஞ் சார்த்தியவையவை பெறுமே" (மரபியல். 74)

(ஊரும் தமது இயற்பெயரும் சிறப்பும் பெயரும் தத்தந் தொழிற் கேற்ற கருவியும் எல்லாரையுஞ் சார்த்தி அவை அவை வருதல் பெறும் எ.று) (உரையாசிரியருரை.)

என்பதனால் அவரவர் பிறந்த ஊரைச் சார்த்திக் கூறற்குடம் படலான், அகுதை பிறந்தவூர்என்று அகுதை கூடல் என வழங்கினரென்றலும் பொருந்தும். இவ்வாறே தித்தன் பிறந்தவூர் என்று "தித்தனுறந்தை" என்றலும் இயையும். இவ்விருபடைத் தலைவரும் முறையே கூடலினும் உறந்தையினும் பிறந்தவர் என்பதையே இவை குறிப்பன எனின் அமையும். பெரும் படைத்தலைவர் மக்கள் தலைநகர்களிற் பிறந்து வளர்ந்தனர் என்றற்கண் இழுக்கில்லையென்க. தித்தனுறந்தை அகுதைகூடல் என்புழி ஊர்கள் இயற் பெயரைச் சார்த்தி வந்தனவெனக் கொள்க. சோழனுறந்தை செழியன் கூடல் என்ற ஊர்கள் குடிப் பெயரைச் சார்த்தி வந்தன என்க. இச் சூத்திரத்தாலும் இவரை ஊர்பற்றிப் பெருவேந்தர் குடியினரென்பது இயலாமை நன்கு நோக்கிக் கொள்க. கூகைக் கோழி எனப் பெயரிய புலவன் பிறந்தவூராதல் பற்றிக் "கூகைக் கோழிவாகைப் பறந்தலை" (புறம்.364) எனப் புலவர் பாடுதல் கொண்டு இவ்வுண்மை துணியலாம். இவ்வாகை "வண்கையெயினர்" வாகையாதல் முன்னரே காட்டினேன். எவ்விக்கும் பசும் பூட் பாண்டியர்க்கு நிகழ்ந்த இப்போரில் அகுதை படைத் தலைவனாக வல்லது பாண்டியனாகாமை, எவ்வியைப் பசும் பூட் பாண்டியன் வென்றதாகக் கூறும் பலமேற் கோள்களாலும் தெளிக.

இவற்றால் இவ்வகுதை பாண்டியர்க்குத் துணையாய கோசர் போற்றுங் கோசர் குடியினனவனென்று கொள்க. மற்றுப் பரணர்,

"இன்கடுங் கள்ளி னகுதை களிற்ரெடு
நன்கலனீயு நாண் மகிழிருக்கை யவை"
(அகம், 76) எனக் கூறிய தனைச்
"சிறியாழ்ப் பாணரார்ப்பப் பல்கல னுதவி
நாளவை யிருந்த நனைமகிழ்த்திதியன் (அகம். 331) என்
புழிப்போலக் கொள்க.

சிற்றரசர்க்குப் படையுங் கொடையும் முரசும் நாளவையுங் கூறப்படுதல் இத்தன் வரலாற்றிற் பரக்கக்கூறினேன். இத்துணையுங் கூறியவாற்ருற் கோசருள் அதகன், ஞிமிலி, அகுதை என்ற வீரர் வரலாறு ஒருவாறுணரப்படும்.

திதியன்.

இவன் பூதப் பாண்டியன் பாடிய அகப்பாட்டில் (25)
"பொருநர்,
செல்சமங் கடந்த வில்கெழு தடக்கைப்
பொதியிற் செல்வன் பொலந்தேர்த்திதியன்
இன்னிசை யியத்திற் கறங்கும்
கன்மிசை யருவிய காடிறந்தோரே"

என வருதலாற் பாண்டியர்க்குத் துணையானனெனத் துணியப்படும். இவன் வேளிருள் ஒருவனுன திதியனின் வேருவனென்பது,

"நாளவை யிருந்த நனைமகிழ்த் திதியன்
வேளிரொடு பொரீஇய கழித்த
வாள்வா யன்ன வருஞ்சுர மிறந்தே" (அகம். 331)

என்பதனுலறியலாம். இதன்கட்டிதியன் வேளிரொடு பொருதற்கு உறைகழித்த வாளுடைமை கூறியதனுல் இவன் வேளிருள் ஒருவனுகா னென்று கொள்க. தலையாலங் கானத்துப் போரிற் பாண்டியற்குப் பகையாயெதிர்த்து நின்ற ஐம்பெருவேளிருட்டிதியன் என்ற பெயருடையா னெருவனுண்மை,

"கொய் சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங்கானத் தகன்றலை சிவப்பச்
சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம்பூ ணெழினி
நாரரி நறவி னெருமை யூரன்

றெங்கம முகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மா னியறேர்ப் பொருநனென்
றெழுவர் நல்வல மடங்க வொருபகன்
முரசொடு வெண்குடை யகப் படுத் துரை செலக்
கொன்று களம் வேட்ட ஞான்றை'' (அகம். 36)

எனவரும் மதுரை நக்கீரர் பாட்டானறியப்படுதலாற் பூதப்பாண்டியனாற் சிறப்பிக்கப் பெற்ற இத்திதியன், பசும்பூட் பாண்டியனை யெதிர்த்துப் பொருத திதியன் ஆகாமை தெளியப்படும். இவன் வேளிரொடு பொரீஇய கழித்த வாளுடையனென்றதனானும் இவனுக்கும் வேளிர்க்குமுள்ள பகைமை நன்கறியலாகும். கொண்கானத்து வேளிர்க்கும் துளுநாட்டுக் கோசர்க்குமுள்ள பகைமை, மிஞிலிக்கும் எயினற்கும் நிகழ்ந்த போரான் முன்னரே விளக்கப்பட்டமை ஈண்டைக்கு நினைக்க. மற்று ஆஅய் வேளுக்குரியதென்று ''ஆஅய் பொதியில்'' எனவும் (புறம்.128),

''பொது மீக் கூற்றத்த நாடு கிழவோயே'' (புறம், 135)

எனவும் வருமிடங்களால் நன்கறியப்பட்ட பொதியில் வேளிர் பகைவனாகிய இத்திதியற் குரியதாதல் எங்ஙனமெனிற் கூறுவேன். பொதியில் தென்னவனுக்குரிய பாண்டியர்க் குரித்தென்பது,

''வேம்பின்
வெறிகொள் பாசிலை நீலமொடு சூடி
யுடலுநர்க் கடந்த கடலந்தானைத்
திருந்திலை நெடுவேற் றென்னவன் பொதியில்''
(அகம். 138)

என்பதனால் நன்கறியப்படும். இம்மலையிற் சிற்றரசர் பலர் ஆங்காங்குக் குறும்புசெலுத்தியிருக்கலாம். ஆகலாற் பாண்டியர்க்குத் துணையாய திதியனும் அப்பொது மீக் கூற்றத்த நாட்டினொரு சாரிருந்தானாதல் இயையுமென்று கொள்க. இத்திதியன் வேளிரொடு பொரீஇய கழித்த வாளின் வாயினைக் கடிய சுடு சுரத்திற்கு உவமை கூறியதனான், இவன் வாளின் வலியால் வேளிரை வென்றது உய்த்துணரலாகும், அவ்வென்றியால் ஆஅய்வேளை

வென்று பொதியிலிற் றென்னவனுக்குத் துணை என்பாள்.

"வாலிது மூடா அது கலத்து முண்ணுது" தங்கட்கியல் பாகிய கோசமுறையிற் பழிக்குப் பழி வாங்குவதாக விரதம் பூண்டவளாய்த் தங்களிற் றலைவராயுள்ள குறும்பியனுக்கும் திதியனுக்கும் தன் விரதவரலாறு கூறினுள் திதியன் குறும்பியன் துணையாக அங்ஙனங் கண்களைந்த அவ்வூர் முதுகோசரைக் கொன்று தன் இனத்தவர்க்கு ஒண்டாகிய முரண்பாட்டைப் போக்கினன். அன்னி மிஞிலி சினமாறி மிடுக்குடனியலினள். இவ்வரலாறு அகப்பாட்டில்,

"முதைபடு பசுங்காட் டரிற்பவர் மயக்கிப்
பகடுபல பூண்ட வுழவுறு செஞ்செ
விடுமுறை நிரம்பி யாகுவினைக் கலித்துப்
பாசிலை யான்ற பயறு புக்கென
வாய்மொழித் தந்தையைக் கண்களைந் தருளா
தூர்முது கோசர் நவைத்த சிறுமையிற்
கலத்து முண்ணுள் வாலிது முடா அள்
சினத்திற் கொண்ட படிவ மாறுள்
மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்
செருவிய னன்மான் திதியற் குரைத்தவர்
இன்னுயிர் செகுப்பக் கண்டுசின மாறிய
அன்னி மிஞிலி போல மெய்ம் மலிந்
தானு வுவகையே மாயினெம்" (அகம். 262) எனவும்.
"தந்தை, கண்சவி னழித்ததன் றப்பற்றெறுவர
வொன்று மொழிக் கோசர் கொன்று முரண் போக்கிய
கடுந் தேர்த் திதியன் அழுந்தைக் கொடுங்குழை
யன்னி மிஞிலியி னியலு
நின்னலத் தகுவியை முயங்கிய மார்பே" (ஷை. 196)

எனவும் வருவனவற்றுன் அறியப்படும். பயறு ஆபுக்கெனத் தந்தையைக் கண்களைந்து அருளாது ஊர் முது கோசர் நவைத்த சிறுமையினல் அன்னி மிஞிலி சினத்திற் கொண்ட படிவமாறுள் என்று கூறியது காண்க. ஆ புக்கென என்றதனுல் ஆ பயற்றைத் தின்றதில்லையென்று குறித்தார். இதன் கண் வாய்மொழித் தந்தை என்றது ஊர் முது கோசரோடு ஒரே இனத்தவன் ஆன

தந்தை என்பது புலப்பட நின்றது. முது கோசராயிருந்தும் இன மென்று நோக்காது, தண்டந் தகுதியன்றென்பதும், எண்ணாது எல்லா வுறுப்பினுஞ் சிறந்த கண்ணை அருளாது களைந்தன ரென்றார். படிவம் என்றார், பழிக்குப் பழி வாங்கக் கொண்ட வஞ்சின விரதமென்பது தெரிய. குறும்பியனுந் திதியனும் கோசரின மல்லராயின் இங்ஙனம் எளிதில் ஒன்றுமொழிக் கோசரைக் கொன்று முரண் போக்கலாகா தென்க. முரண் போக்கிய என்றதனால் ஓரினத்திற்குள் நேர்ந்த முரண்பாடு இஃதெனத் துணியலாம். ஊர் முது கோசர் பிழையாதலால் இவ்வழக்கில் வேளிர் இடையிற் புக்குக் கொன்று முரண் போக்கல் இயலா தென்க. கோசர் அந்நியராற் கொல்லப்படத்தக்க எளியரல்லர் என்பதும் நினைக. ஊர் முது கோசர் தம் தலைவர்க்கடங்கிக் கொலையை யேற்று முரண் போய் வாழ்ந்தன ரென்பதே பொருந்து மென்க மிஞிலி என்னும் பெயர் கோசர் பெயரென்பது வாய்மொழி மிஞிலி என்பதனாலும் அவன் வேண்மானெயினனைக் கொன்றவரலாற்றானும் அறியப்பட்டது. இனி இத் திதியன் அழுந்தை என்பது திதியன் ஆட்சியுட் பட்ட அழுந்தை என்னும் ஊர் ஆகும். இது சோணாட்டு வேளிர் இருந்த அழுந்தூரின் வேறாய்க் குடமலை நாட்டிலிருந்த [illegible]மென்க. இனி இத் திதியனே பாண்டியற்குத் துணையாய்ச் சோணாட்டிற்புக்குக் குறுக்கையில் அன்னி என்னும் வேளுடைய புன்னையாகிய காவன் மரத்தை வெட்டி வீழ்த்தினன் என்று தெரிக. இது பற்றியே திதியன் வேளிரொடு பொரீஇய கழித்த வாள்வாய் என்று சிறப்பிக்கப்பட்டதெனின் நன்கு பொருந்தும் அகத்தில்,

> "எவ்வி, நயம்புரி நன்மொழி யடக்கவு மடங்கான்
> பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித்
> திதியனொடு பொருத அன்னி போல
> விளிகுவை" (126

என வருதலானிவ்வுண்மையறிக. இதன் கண் வேள் எவ்வி தன்னினத் தவனான அன்னிக்கு நன்மொழி

கூறி அடக்கவும் அடங்காது, அவ்வன்னி தன் காவன் மரமாகிய புன்னையை விரும்பித் திதியனொடு பொருது விளிதலறியப்படுதலான், இதுவே திதியற்கும் வேளிர்க்கும் நிகழ்ந்த போரென்றுகொள்ளத் தகும். எவ்வி நன்மொழி கூறி அன்னியை அடக்கியது தன் வேளிரினத்தவனென்பது பற்றியாகும். இங்ஙனங் கொள்ளாக்கால் வேள் திதியனும் வேள் அன்னியும் பொருதாரெனப்பட்டு இம்முறை கெடுதல் கண்டு கொள்க. திதியன் வேளிரொடு பொருதான் என்பதே அவன் கோசனென்று தெளிவித்தல் காண்க. நற்றிணையில்

"அன்னியும் பெரியனவனும் விழுமியன்
இரு பெரு வேந்தர் பொருகளத் தொழிந்த
புன்னை விழுமம் போல,
என்னொடு கழியுமிவ் விருவர திகலே" (180)

என வருதலான் இத்திதியன் அன்னியினும் பெரியனென்றும் பெருவேந்தாய் விளங்கினவனென்றும் அறியலாம்.

குறும்பியன்

இவன் "மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்" (அகம். 262) என்பதனாற் சிறந்த படையுடையனென்பதும் அப்படையாலெய்திய கொற்றமுடையனென்பதும் அறியப்படும். இவன் திதியனொடு துணையாய் நின்று அன்னி மிஞிலி துயர் கேட்டனன் என்பதனான் இவனுங் கோசனென்றே துணியப்படுமென்க.

ஆதனெழினி

இவன் கோசன் என்பது

"கடலாடு மகளிர் கொய்த ஞாழலும்
கழனி யுழவர் குற்ற குவளையும்
கடிமிளைப் புறவிற் பூத்த முல்லையொடு
பல்லிளங் கோசர் கண்ணி யயரும்
மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான்
எறிவிடத் துலையாச் செறிசுரை வெள்வேல்

ஆதனெழினி யருநிறத் தழுத்திய
பெருங்களிற் றெவ்வம் போல
வருந்துவர் மாதவர் சேரியாஞ் செலினே (அகம்.216)

என வருதலானறியப்படும். இதன் கண் கோசர் கண்ணியயருஞ் செல்விக் கோமான் ஆதனெழினி என்றதனால் இவன் கோசர் தலைவனாகக் கருதப்பட்டான். ஈண்டுச் செல்வி என்பது செல்லூர்க் கொரு பெயர் எனக் கொள்ளத் தகும்.

"அருந்திறற் கடவுட் செல்லூர்க் குணா அது
பெருங்கடன் முழக்கிற் றாகி யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கட் கோசர் நியமம்" (ஷை. 90)

என்றதனால், செல்லூர்க்குக் கிழக்கே கடலோரத்துக் கோசர்வாழும் நியமம் என்னும் ஊரிருப்பது அறியப்பட்டதனால் அதற்கேற்ப ஈண்டுச் செல்வி செல்லூர் எனக் கொள்ளப்பட்டது. மேலே காட்டிய அகப்பாட்டில் மலைப்புறமே கூறாது கடலுங் கழியும் கடியிளைப் புறவுமே கூறுதலான், இது சோணாட்டதாதல் தெள்ளிது. கிள்ளி வளவனைக் கோவூர் கிழார் பாடிய புறப்பாட்டில் இவ்வாறே,

வயலே, நெல்லின் வேலி நீடிய கரும்பின்
பாத்திப் பன்மலர் பூத்த தும்பின
புறவே, புல்லருந்து பல்லா யத்தான்
வில்லிருந்த வெங் குறும்பின்று
கடலே, கால் தந்த கலனெண் ணுவோர்
கான்ற புன்னைச் சினை நிலைக்குந்து
கழியே, சிறுவெள் ளுப்பின் கொள்ளை சாற்றிப்
பெருங்கன் னாட்டு மணெலிக்குந்து
அன்ன நன்னாட்டுப் பொருநம் யாமே" (புறம்.386)

என்று மலையொழியக் கூறுதலான் இவ்வுண்மையுணரலாம். இக்கிள்ளிவளவன் தன் நாட்டுவலி மிகுத் தோங்கும் கோசர் நிலத்தைக் கொள்ள விரும்பி இவர் விளங்கு படையை நூறினன் என்பதனாலும் இவர் சோணாட்டு நியமத் தவராதல் வலியுறுமென்க.

"வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை,
வளங்கெழு கோசர் விளங்குபடை நூறி
நிலங்கொள வெஃகிய பொலம்பூட் கிள்ளி" (அகம் 205)

என்றதனால் அறியப்பட்டதாம், பரசுராமன் காசிபனைக் கொண்டு வேட்பித்த இடம் செல்லூரென்பது 220, ஆம் அகப்பாட்டான் அறியப்படுதலான், பரசுராமன் பின்னை வருணனை வேண்டிப் புதிதாக உண்டாக்கிய கடல் மலை நாட்டில் இச் செல்லூர் இருத்தல் பொருந்தாதென்பது தெளியலாம்.

"செடாஅத் தீயி னுருகெழு செல்லூர்...
கடாஅயானைக் குழூஉச்சமந் ததைய
மன்மருங் கறுத்த மழுவா ணெடியோன்,
முன்முயன் றரிதினின் முடித்த வேள்விக்,
கயிறரை யாத்த காண்டகு வனப்பி னெடுந்தூண்"
(அகம். 220) [illegible]

இவன் வாட்டாற்று வேளாகிய எழினி யாதனென் (புறம் 396) வேளுதற்குச் செல்விக் கோமான் ஆதனெழினி எனப்பட்டான். இவனூர் வாட்டாற்றூர் என்னும் பெயரான் சோணாட்டு அறந்தாங்கிச் சேகரத்துள்ளது என்க. வாட்டாற்றுக்கும், செல்விக்கும் மலைப் புறமே கூறாமை யால் இது கடன் மலை நாட்டுத் திருமால் திருப்பதியாகாமை நன்குணரலாம். அவனைப் பற்றிய புறப்பாட்டில் அவனூட் டையும் இங்ஙனமே மலையில்லாமற் கூறி,

"நனைக் கள்ளின் மனைக் கோசர்,
தீந்தேற னறவு மகிழ்ந்து
நீங்குரவைக் கொளைத் தாங்குந்து" (புறம். 396)

என்று மாங்குடிகிழார் பாடினாராதலின் உண்மை யுணர்க. இப்பாட்டில் அவனை வென்வேல் வேளே, வாட் டாற்றெழினி யாதன்" என்றதனால் அவன் வேளாத லுணர்க. ஆண்டுக் கள்ளைத் தங்கள் மனையின்கணுள்ள கோசர் தீவிய தேறனறவை யுண்டுகளித்துக் குரவை கொண்டு தூங்கும் வாட்டாறு என்று கூறியதாகக் கொள்க. வீரர் இயல்பு கூறுமிடத்தெல்லாம் நறவும்

கள்ளும் மிகுதியாக உடன் வருதல் தமிழ் நூல் வழக்கென்பதனை,

> "நாரரி நறவிற் கொங்கர் கோவே,, (பதிற். 85)
> "இன் கடுங் கள்ளினருகை" (குறுந். 298)

என்பன போன்ற இடங்களா லுணர்க, "செல்லிக் கோமான் ஆதனெழுனி எனவும்' வேளே வாட்டாற்றெழுனியாதன் எனவும் வேறு வேறு ஊரும் பெயருங் கூறுதலான் இவர் வேறுபாடுணரலாம். எழுனியாதனை வேள் என்றது போல, ஆதனெழுனியைக் கூறுமையுங் காண்க. செல்லூர் முதல் வாட்டாறு வரையுங் கோசர் கடற்கரையோரமாகச் சோணாட்டு வதிந்தனர் என்பதனை இவை குறிக்கும். வாட்டாற்றுக் கோட்டை என்பதும் பட்டுக் கோட்டைச் சேகரத்துண்டு. இனி இவ்வகைப்பாட்டில்(216) இவன் செல்லூர்க் கோமான் என்பதும் இவன், வேலை, எதிர்த்த யானையின் அரிய மார்பில் அழுந்தும்படியெறிந்தனன் என்பதும் அறியப்படுவன. இதனாற் கோசர்களிறெறிந்து வரும் பெரு வீரராக விளங்கியது தெரியலாம்.

தழும்பன்

இவன் பாண்டி நாட்டு மருங்கூர்ப்பட்டினத்தையடுத்த ஊணூரிலிருந்த கோசர் பெரு வீரன். இவனைப் பற்றி அகப் பாட்டில் நக்கீரனார்,

> "வாய்வாட், டமிழகப் படுத்த, விமிழிசை முரசின்
> வருநர் வரையாப் பெருநா ளிருக்கைத்
> தூங்கல் பாடிய வோங்கு பெரு நல்லிசைப்
> பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்
> கடிமதில் வரைப்பி னூணூரும்பர்
> விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்
> இருங்கழிப் படப்பை மருங் கூர்ப் பட்டினத்
> தெல்லுமி ழர்வணத் தன்ன
> கல்லென் கம்பலை செய்தகன் றோரே" (அகம்-227)

எனக் கூறுதலான் இவன் வழுதியாகிய பாண்டியற்குத் துணைவலியாயவன் என அறியப்படுவன். தன் தப்பாத வாளினால். தமிழ் நாட்டைத் தன்னகப் படுத்திய

வருநர்க்கு வரையாத பெரு நாளிருக்கையையுடைய முரசுடைச் செல்வனும், தூங்கல் பாடிய ஓங்கு பெரு நல்லிசையினனும் ஆகிய பிடிமிதித் தேறும் வழுதியாகிய பாண்டியற்கு இவன் போர்த் துணைவனென்றும், போரிற்பட்ட அழகிய பெரும் புண்ணால் உண்டாகிய தழும்புடைமையாற் றழும்பன் என்னும் பெரும் பெயருடையன் ஆயினானென்றும், இவன் காவல் மதிலையுடைய ஊணூரிலிருந்தனனென்றும், அவ் வூர் பாண்டியர் பெருந் திருநகராகிய மருங் கூர்ப்பட்டினத்திற்குத் தெற்கணுள்ள தென்றும் அறியலாம். தழும்பன் என்பது புண்ணின் தழும்பால் எய்திய பெயரென்பது,

> "நெய்வார்ந் தன்ன துய்யடங்கு நரம்பி
> னிரும்பா ணொக்கற் றலைவன் பெரும்புண்
> ஏஎர்த் தழும்ப னூணூ ராங்கட்
> பிச்சை சூழ் பெருங்களிறு போலவெ
> மட்டி லோலை தொட்டனை நின்மே" (நற். 300)

என்பதனானறியலாம். நக்கீரர் பாட்டில் வாய்வாள் முதலாக வுள்ளன வழுதிக்கு அடையாகக் கொள்க. வழுதி-மாறன் வழுதி. இவன் தமிழகப் படுத்தியது புறப்பாட்டில் (51)

> "தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன் போரெதிர்ந்து
> கொண்டி வேண்டுவ னாயிற் கொள்கெனக்
> கொடுத்த மன்னர் நடுக் கற்றனரே"

என்பன முதலாக வருமடிகளாலும் ஆண்டுப் பழைய வுரைகாரர் "குளிர்ந்த தமிழ் நாடு மூவேந்தர்க்கும் பொது வென்று கூறப்பொறானாய்ப் போரை யேற்றுத் திறையை வேண்டுவனாயின் கொள்க வென்று சொல்லி, முன்னே கொடுத்த மன்னர் நடுக்கந் தீர்ந்தனர்" என்றதனாலும் உணரப்படும். வாய் வாளால், தமிழகப்படுத்த இமிழிசை முரசையுடையவனும், தூங்கல் என்னும் நல்லிசைப் புலவராற் பாடப் பெற்ற ஓங்கு பெரு நல்லிசையுடையவனும் பிடிமிதித் தேறுபவனும் வழுதியாகிய பாண்டியன் எனவும், அவனுக்கு உறு துணையாய்ப் போரிற் பட்ட புண்ணையலாகிதழும்பினாற்றழும்பன் எனப்பட்டான் இவனெ

னவும், வழுதிக்குத் துணையாயதனல் அவன் மருங்கூர்ப் பட்டினத்தை அடுத்து இவன் ஊணூரில் வாழ்கிற் பவனெனவும் கருதிக் கொள்க. மருங்கூர்ப் பாண்டி நாட்டுக் கடற் பக்கத்தூர். கோசர் பாண்டியர்க்கு உறு துணையாதல் மதுரைக் காஞ்சி யடிகளைக் காட்டி முன்னரே விளக்கினேன். வழுதி துணை என்ற பாடம் எழுதினர் வழுவே துணைக் கொண்டு வழுதுணையென வரையப் பட்டது வேறு வேறு பொய்ப் பொருள் கோடற்குக் காரணமாயிற்றென்க. தமிழகப்படுத்த பெருஞ் சிறப்பு வழுதியதாதல், 51 ஆம் புறப்பாட்டால்,தெரிந்து இவ்வுண்மை எளிதினறியலாம். நற்றிணைப் பாட்டால் இத் தழும்பன் பாணர்க்குச் சுற்றம் போல் விளங்கியவன் என்பதும், இவன் ஊரிற் பாணர் பிச்சையிற் சூழ்ந்து பெற்ற பெருங் களிறுகள் வீட்டு வாயில் தோறும் வந்து நிற்கும் என்பதும் அறியலாகும். பிச்சை சூழ் பெருங்களிறு என்பது 'களிறு பெறு வல்சிப் பாணன்' என்பதனல் விளக்கம் பெறுதல் காண்க. பெருங்களிற்றையும் பாணர்க்குப் பிச்சையாக நல்குஞ் சிறப்பான் ஊணூரின் செல்வ நிலை குறித்தாரென்க. இவனைப் பரணர்,

> "வெண்ணெ லரிநர் தண்ணுமை வெரீஇக்
> கண்மடற் கொண்ட தீந்தே னிரியக்
> கள்ளரிக்குங் குயஞ் சிறுசின்
> மீன்சீவும் பாண்சேரி
> வாய்மொழித் தழும்ப னூணூ ரன்ன (புறம். 348)

எனப் பாடுதலான் இவன் வாய்மொழியிற் சிறந்த கோசர் குடியினனாதல் அறியலாம்.

இனிக் கலியுள்,

> "காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
> யாழ்வரைத் தங்கியாங்கு" (பாலை. 1).

என்பதனாற் பாகன் குத்துக் கோற்கு நில்லாத கடுங் களிறு யாழிசையின் எல்லையிலே தங்கினாற் போல என் றுரைத்தார்.

இவ்வாறு யாழிசையால் மதயானையை வசஞ் செய்த செய்தி வத்ஸதேசத்துக் கோசத்திலிருந்த

உதயணற்குரிய சிறப்பென்பது பெருங் கதை வல்லார் நன்கறிவர்.

"களிற் றெருத்தல் யாழ்வரைத் தங்கியாங்கு"

என இறந்த காலத்தாற் கூறுதலால், இது பழையதோர் நிகழ்ச்சியைக் கருதிய தென்று நன்கு துணியலாம். கவி யில் இச் செய்தி கூறியவர் கொங்கிற் கருவூரிலிருந்து அரசாண்ட சேரர் என்பது இவரைப் பேய் மகளின வெயினி பாடிய புறப் பாட்டில்,

"அரிமயிர்த் திரள் முன்கை
வாலிழை மட மங்கையர்
வரிமணற் புனைபா வைக்குக்
குலவுச் சினைப் பூக்கொய்து
தண்பொருநைப் புனல்பாயும்
விண் பொருபுகழ் விறல் வஞ்சிப்
பாடல் சான்ற விறல் வேந்தனும்மே" (புறம். 11)

என வருதலானும் அதற்குப் பழைய வுரைகாரர், "ஐம்மையை யுடைய திரண்ட முன்னங் கையினையும் தூய ஆபரணத்தையும் உடைய பேதை மகளிர் வண்டலிழைத் துச் சிற்றிற்கட் செய்த பாவைக்கு, வளைந்த கோட்டுப் பூவைப் பறித்துக் குளிர்ந்த ஆன் பொருந்தத்து நீரின் கட் பாய்ந்து விளையாடும் வானைமுட்டிய புகழினையும் வென்றியையு முடைய கருவூரின்கட் பாடுதற்கமைந்த வெற்றியையுடைய அரசனும்" என்றுரைத்த தனுனும் அறியப்படும். இவர் கோசர் வதிகின்ற கொங்கிற் கரு வூரிலிருந்து கொங்கிளங் கோசர் முன்னை வரலாறு தெரிந்தவ ராதலால் அவ் வுதயணன் செய்தியை ஈண்டுக் கூறிக் காட்டினரென நன்கு துணியலாகும். பிற் காலத்து இத் தமிழ்நாடாண்ட பல்லவ வேந்தராலும் இப் புகழ் போற்றப்பட்ட தென்பது பாகூர்ப் பட்டயத்து நந்திவர்ம பல்லவனை, "வாரண தந்தரீ விஷயே வத்ஸேச் வரஸமாந:" என்று பிரசஸ்தியாற் கூறுதலான் அறி யப்படும். இனி இவர் நாலூர்க் கோசர்" (15) எனக் குறுந் தொகையில் வழங்கப்பட்டனர்.

இனி நற்றிணை 265 ஆம் பாட்டில்,

"விளையம்பின் வில்லோர் பெருமகன்
பூந்தோன் யாப்பின் மிஞிலி காக்கும் பாரத்தன்ன"

என வருதலான், இக் கோசர் பூந் தொழில் செய்த தோள்யாப்பாகிய ஒருவகைக்குப்பாயமணியும் இயல்பின ரென்றறியப் படுவது. வடமொழியிற் கோசம் கவசத்திற்குப் பெயராதலான் அதை எப்போதும் அணிந்தவர் கோசர் எனப் பட்டனரெனின் இவர் வீரத்திற்கும் படைத் தொழிற்கும் பொருந்து மெனினும், பல நாட்டு வேந்தர் பரிவாரத்திற் காவற் படையிலுள்ள வீரர் பலர்க்கும் இக் குப்பாயமுண்மை கேட்கப் படுதலின், இவர்க்கே சிறந்த அடையாளம் அஃதாகாமை உணர்க. "கஞ்சுக மாக்க ளீரைஞ்ஞூற்றுவர்" சேரன் செங்குட்டுவன் பரிவாரத்திற் கூறப்பட்டாலும் அவரைக் கோசரென வழங்காமையாற் றுணியக் கூடவில்லை.

இனி வால்மீகி ராமாயணம் 32 ஆம் சருக்கத்து. "பிரமற்கு மகனாகிய குசரென்பவர் பெருந் தவம் புரிந்து நோன்புகளைத் தவறாது செய்து கருமங்களை யுணர்ந்து பெரியோர்களைப் பூசித்துப் பெருமை பெற்றிருந்தார். அந்த மகாத்மா நற்குலத்திற் பிறந்து நல்லொழுக்க மிக்க வைதர்ப்பி என்பவனிடத்தில் நற்குணங்களாற் றம்மை யொத்த குசாம்பன், குசநாபன், ஆதூர்த்தரஜஸ், வஸு என்னும் பெயருள்ள நான்கு புதல்வரைப் பெற்றார். (2) குசர் க்ஷத்ரிய தர்மத்தைச் செய்வதில் விருப்பமிக்கவராகி, ஒளி நிறைந்தவரும், பெரிய ஊக்க முள்ளவரும், தருமத்தினிற்பவரும், வாய்மையே பேசுகின்றவரும் ஆன அப் புதல்வரை நோக்கிக் குடிகளைப் பாதுகாத்தல் செய்யுங்கள், தர்மத்தை நிரம்ப அடைவீர்கள் என்று சொன்னார்.

உலகிற் கொத்த நரரிற் சிறந்த அந்நால்வரும் குசருடைய வார்த்தையைக் கேட்டு அப்போதே நான்கு நகரங்களிற் புகலாயினர். ராம பேரொளி நிறைந்த குசாம்பர் கௌசாம்பி என்ற நாமபுரியை உண்டாக்கினார். தர்ம சிந்தையராகிய குசநாபர் மஹோதயம் என

னும் புரத்தை உண்டாக்கினர். ஆதூர்த்த ரஜஸ் என்னும் மகிபதியானவர் புரங்களிற் சிறந்த தர்மா ரண்யம் என்னும் ஊரை உண்டாக்கினர். வஸு என்பவர் கிரிவ்ருஜம் என்பதை உண்டாக்கினர்.''

எனக் கூறப்படுதலான் குசர் என்பவரின் மக்கள் நால்வர் நாலூர்களைப் படைத்தனர் என்பது கேட்கப் படுவது. இக் குசர் வழியினர் கௌசர் எனப்பட்டு அவரே கோசர் எனப் பட்டனர் என்றும், இவர் முதன் முதல் நாலூரினின்று பெருகியதனல் நாலூர்க் கோசர் எனப் பெயர் சிறந்தன ரென்றும் கருதுவது மிகவும் பொருந்தியதாகும்.

இனி வத்ஸன் என்னும் ஓரரசன் ஆண்டதனாற் கௌசாம்பியைத் தலை நகராகக் கொண்ட நாடு வத்ஸ தேசம் என வழங்கப்பட்ட தென்றும், அவ் வத்ஸ ராஜன் தன் பிறப்பின் தூய்மையை உலகறியத் தீமேன டந்து ஊறுபடாது நின்று காட்டினன் என்றும், இவ் வாறு அரியதோர் திவ்ய சோதனையாகிய கோசத்தை மேற் கொண்டொழுகியதனல் அவன் முதற் கோசன் எனப் பட்டான் என்றும், இக் கோசம் நிகழ்த்திய காரணத்தினல் இவன் வழியினர் வாய்மொழிக் கோசர் எனப்பட்டா ரென்றும் நினைதற்கு இடனுண்டு. வத்ஸ ராஜன் தீமேனடந்த செய்தி Cambridge History of India Vol I. பக்கம். 134. என்புழிக் கண்டு கொள்ள லாம். இவ் வத்ஸ ராஜன் வழியினனுகிய உதயணனைப் பெருங் கதை நூலார்,

"வாய்த்த லாற்ருன் வாய்மொழி யரசன்''

எனக் கூறியதும் இம்மரபு பற்றிய தெனின் நன்கு பொருந்தும். கோசம் திவ்ய சோதனைக்குப் பெயரென் பது கோசத்தின் பல பொருள்களுள் திவ்யம் என்பதும் அதற்குப் பொருளென்று அமரஸிம்ஹன் தன் நிகண் டிற் கூறுதலான் அறிந்தது. இக் கோசம் தேசாசாரத் தால் ஆங்காங்குப் பலவேறு வகையாக நிகழும். அக் கினி சோதனை சீதாப்பிராட்டியார் புரிந்து காட்டியது.

காச்மீரத்தில் ரக்த கோசம் நிகழ்ந்தது முன்னரே கூறி னேன். மிருதிகளிற் காளி கோயிலிலும் பைரவர் கோயி லிலும் அபி மந்திரித்த நீரைக் குடிக்கச் செய்வது கோசம் எனக் கூறுவர். ரக்த கோசம் வாய்மையினும் நட்பினும் பிறழாமைக்கும் மேற் கொள்ளப்படுமென்பது மேலே காட்டினேன்.

இக் கோசகுலம் எதிர்த்த படையில் யானையை யல் லது எறியேம் என்று திவ்ய சபதஞ் செய்து ஹஸ்தி கோசம் என்னும் ஒரு குழுவாகவும், எதிர்த்த வீரரை யல்லது எறியேம் என்று சபதஞ் செய்து வீரகோசம் என்னும் குழுவாகவும் வழங்கப்படும்.

இவ் வுண்மை,

"வேந்தூர் யானைக் கல்ல
தேந்துவன் போலான்ற னிலங்கிலை வேலே" (புறம். 301)
எனவும்

"கறையடி யானைக் கல்ல
துறைகழிப் பறியா வேலோ னாரே" (புறம். 323) எனவும்
வருவன.

யானை எறியும் வீரரைப் பற்றிய னவாதலானும்,
"தானால் விலங்காற் றனித்தாற் பிறன்வரைந்தால்
யானை யெறித லிளிவரவால்—யானை
ஒருகை யுடைய தெறிவலோ யானும்,
இருகை சுமந்துவாழ வேன்" (தொல். புறத்திணை. 5 உரை)
எனவருவது,

யானை எறியாது வீரரை எறியும் வீரனைப் பற்றியதாதலானும் உணரலாம்.

சாளுக்கிய ஜெயஸிம்மன் சாசனத்தில் "ஆக்ஞப் திரத்ர ஹஸ்தி கோச வீர கோச. (Epigraphia Indica Vol. 19 பக்.257) எனவருதலானிப் பாகுபாடுணரலாம். கருவூர்க்கும் கீழ்பால் மூன்றுகல் தூரத்தில் வண்டி வழி யின் பக்கத்துக் கிடக்கும் வட்டெழுத்துள்ள ஒரு சிலையில்,

ஸ்ரீ "கூற்றருதை கெல்லி நிறுபன் களகா
.........த்தி கோச முடைக் கோசமு......
.........ஐ ம்பெருங் குழுவு சங்கமிவை காத்தான்
"அடியென் றலைமேலன"

என்றஓர் சிதைந்த வெண்பா உள்ளது. சாசன வெளியீட்டாலறியப்படுவது இதன் கட் கூற்றருதை என்பது அருதைஎன்பவன் கூற்று எ.று. சங்ககாலத்துச் செங்குட்டுவனுக்கு நண்பினனாய், மோகூர் மன்னற்குப் பகையாயிருந்த "அறுகையை"த்தான் இப்படிப் பிழைக்க எழுதினரோ என நினைப்பு வருகின்றது. பின்னே கெல்லி நிறுபன் என்பது கொல்லி நிருபன் என்பதாகும். கொல்லி நிருபன் சேரன் என்பது தெளிந்தது.

"கொல்லி யாண்ட குடவர் கோவே" என்பது சிலப்பதிகாரம்

இதன் மேன் களகார—கழகரா என்பதாகும்; கழகத்தாராக என்பது பொருளாம். இதன் பின் இரண்டோரெழுத்து விடுபட்டிருக்க வேண்டும். அங்ஙனம் விடுபட்டாலும் (அ)த்தி கோச முடைக் கோசமும் என்னும் தொடரை இவ் விரண்டாமடி நன்கு தெளிவிப்பதேயாகும். அத்தி கோசம் என்னும் குழு வினையுடைய கோசர் குடியும் என்பது பொருளாகும். மூன்று மடியில் ஐம்பெருங் குழு கூறப்படுதலால் "ஐம் பெருங் குழுவு மத்தி கோசமும்" என்னும் பெருங் கதைத் தொடர் போல வந்த தொன்றென நன்கு துணியலாம். அத்தி கோசத்தார் "குழுவின் பெயர்" எனக் கொண்டு அது "தாந்திரண்டு ஒரு துறைக்கண் உரிமை பூண்ட பல்லோர் மேல் எக் காலத்தும் நிகழும் பெயர்" என்று சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் விளக்குதலான் இக் குழுப் பெயரியல்பு உணரலாம். (தொல். சொல் சூத், 162). திரண்டு ஒரு துறைக் கண் உரிமை பூண்ட பல்லோருடைய குழுவின் பெயர் அத்தி கோசம் என்று இவருரையால் அறியப்பட்டதனால், இது போர்த்துறையில் யானையே எறிந்து பல உரிமை பூண்ட பெருவீரர் குழுவாகத் துணியப் பட்டது. உரிமை பூண்ட என்பது வீர சபதஞ் செய்து அவ் வுரிமையை மேற் கொண்ட எ. று. இனி யானை யேறிப் பொருதற்குக் கோசம் (திரவியம்) பெற்றவர் அத்தி கோசத்தார் எனினும் அமையும். இது கொந்தழலஞ்சாக் குஞ்சரமிவர்ந்தார் கோடியே விருத்

தியா வுடையார்'' (சிந்தாமணி-2156) என்பதனுனும், நச்சி னர்க்கினியர் ஆண்டுக் குஞ்சரங்களை ஏறினவர்கள்....... கோடி பொன்னைச் சிவிதமாக வுடையராயிருப்பார்'' எனவுரைத்ததானும் உணரலாம். அத்தி கோசமுடைக் கோசர் என்றதனால் இவ்வுரிமை கோசக் குடிக்குரிய தென்று துணியப் படுதல் காண்க. கோசரை இரும்பிடம் படுத்தவடு வுடை முகத்தர்'' (அகம். 90) என்றதற்கியைய, இச் சிந்தாமணிப் பாட்டில் ''மூத்தமர் தம்முள் முழுமெய் யிரும்பு மேய்ந்திடவெஞ்சமம் விளைத்தார்'' எனக் கூறி யதுங் கண்டு கொள்க. இத் தமிழ் நாட்டிற் பண்டு கோசக் குடி ஆயிரமாயிரமாகச் சிறந்து விளங்கிய தென்பது, திருநெல்வேலியைச் சேர்ந்த கல்லிடைக் குறிச்சி யிலுள்ள கோசக் குடிப் பெருமாள் கோவிற் சாசனங்களால் அறியப்படுவது. இவ்வூரிலுள்ள திருமாலுக்கு நாலாயிர விண்ணகரெம் பெருமான் எனவும், சிவ பெருமானுக்கு நாலாயிர வீச்சுர முடையார் எனவும் வழங்குதல் காண லாம். (See. Topographical list of S. Indian Inscriptionsns. Vol III Tinnevelly Dt.Nos.41,43, 44, 48, 49, 50) இப்பெயர்கள் கோசர் நாலாயிர வராற் பெற்ற பெய ரென் றெளிதிலறியலாகும். கோசக்குடிக் கோயில் என்ற வழக்கே இவ் வுண்மையை வெளிப் படுத்தல் காண்க. இவ்வூர்ப் பக்கத்துள்ள அம்பா ஸமுத்திரத்தின் பழம் பெயர் இளங்கோயக் குடி என்பது சாசன வல்லார் நன்கறிவர் (ஷை. 28, 29). கோவிற்பட்டியைச் சார்ந்த கழுகு மலையிற் கோசக்குடித் தெரு என்றோர் தெருவுள் ளது (ஷை.250) காணலாம். இக் கழுகு மலைச் சாசனங் களில் ''நாலூர், நால்கூர் என்ற பெயருடையான் பல் விடத்தும் வருதல் காணலாம் (See South Ind. Inscr. Vol. V 354, 355, 356, 357, 404). இக் கல்வெட்டுக்களில் (ஷை Vol. VI Nos. 425, 427, 443, 44 இங்ஙுவத்தாயன் என்ற பெயரும் மிக வருதல் கண்டு கொள்ளலாம். இப் போது கழுகு மலை என்பது அக் காலத்துக் கோசர் கழக மலை என்று வழங்கிய தென நினைகின்றேன். இம் மலையடியிலுள்ள கோசர் குடித் தெரு இவ் வுண்மையை

வலியுறுத்தும், இக் கோசர் ஒரு திரளாகச் சபதஞ் செய்து கொள்பவ ரென்பது இவ்வூரை யடுத்துள்ள "குழுவாணை நல்லூர்" என்ற பெயரான் ஊகிக்கப்படுவது. இக் குழுவாணை நல்லூர்க் கோசர் தாம் குறுந் தொகையில் நல்லூர்க் கோசர் என வழங்கப்பட்டனரோ என ஐயுறுகின்றேன். அன்றி மேலே காட்டிய கழுகுமலைப் புறத்து நாலூர் பற்றி நாலூர்க் கோசர் எனப்பட்டன ரெனினும் பொருந்தும். இவையெல்லாம் பாண்டி நாட்டுப் பாண்டியர்க்குத் துப்பாய்க் கோசர் பெருந்திரளாக வதிந் தன ரென்பதை வற்புறுத்து மென்க. வத்ஸ கோசர் தமிழ் வேந்தர் மூவருட் பாண்டியர்க்குத் துப்பாதற்குக் காரணம், வத்ஸ தேயத்தார் பாரதப் போரிற் பாண்டவர் படையை அவரிடங்கையினின்று காத்தா ரென்று மகா பாரதத்துக் கேட்கப் படுதலானும் உய்த் துணரலாகும். அன்று தொட்டே வத்ஸ கோசர் பஞ்சவர்க்கு நண்பின ராதல் இதனானுணரப்படும். பாண்டிய தேயத்து வத்தரா யன் எழுத்து" என்பதும் பயிலக் காணலாம் (S. I. Inscr. Vol. V. No. 418)

இனிக் கோசர் குடியினர் இந் நாட்டின் சில பகுதிகளை ஆண்டு தலைமை யெய்திய நிலையில் இவர்களை வத்ஸ ராஜர் வத்தராயர் என்று வழங்கத் தலைப்பட்டனர் என்பது மேற் கூறிய சாசனக் கையெழுத்துக்களானும்,

"புயன் மேவு பொழிற்றஞ்சை முதற் பஞ்ச
நதிவாணன் புதல்வன் பூண்ட
வயன் மேவு களியானை முடி கொண்டான்
மாநெடுவேல் வத்தர் வேந்தன்
இயன் மேவு தோளபயற் கிருபத்தையாண்டி
லிடராக் கரம்பைச்
செயன் மேவு மிசர்க்குத் திருநந்தா
விளக் கொன்று நிறுத்தினனே."

என்னுஞ் சாசனப் பாட்டானும் அறியப்படும். (S. I. I. Vol. IV. 1338) ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு நாற்பத்தாறாவது திருவிந்தளூர் நாட்டுக் கஞ்சாறன் பஞ்ச நதி முடி கொண்டானை வத்தரா

யன் மாதா பிதாக்களைச் சார்த்தி இடாக் கரம்பை மூல ஸ்ரீ விமாநாத முடையார்க்கு விளக் கொன்று" (S. I Inscr. Vol. 1V No 1339 A) என்பதனுலிவன் சோணுட்டிருந்த வன் என்பது புலப்படுவது. கோசன் செருந்தை உறந் தையிலிருந்தது முன்னரே காட்டினேன். இவரெல்லாம் சோணுட்டுச் செல்லூரை யடுத்து நியமத்திருந்த கோசர் வழியினராவர்.

இனி நான் மொழி நாட்டு விடுகாதன் ஆன வத்தராயன் என்பவனொருவன் நாமக்கற் சாசனத்தால் அறியப்படு கின்றான். (Top, List of Inscr. Trichnopoly No. 213) இச் சாசனம் நான் மொழிக் கோசர் என்ற மதுரைக் காஞ்சியின் பொருளை நன்கு விளக்குதல் காண்க. வத்ஸ ராஜன் ஒருவன் ஆரியர்க்குத் திரணி என்ற ஊரை அளித் தது (ஷை. No. 294) ஆவது சாசனத்தாலறியப் படுவது. இவரெல்லாம் கொங்கிற் கோசராவரென்று கருதுகின் றேன். வச்சத் தொள்ளாயிரம் கொண்டவனும் இக் கொங்கு நாட்டவன் என நினையலாம் இனி "வாய்மொழி வஞ்சன்' என்பவன் பாயல் மலைக்குக் கோவாகப் புறப் பாட்டில் வழங்கப்பட்டுள்ளனன். வத்ஸன் என்னும் பெயர் வம்சன் எனச் சைந பௌத்த நூல்களில் மிகுதியாக வழங்கப் படுதலால் இப் பாயற் கோவும் வத்ஸ தேயத்தான் என ஊகிக்கின்றேன். இதற் கேற்பவே இவனைக் கோசர்க்குச் சிறந்த வாய்மொழி யால் விசேடித்து "வாய் மொழி வஞ்சன்" எனப் பாடுதல் காண்க. மற்றுக் கொளு எழுதினவர் சேரமான் வஞ்சன் என்றது, அவன் சேரமானுடையவன் என் பது பற்றியென நினையலாம். இது பிற்காலத்துப் பாண்டிய சாசனங்களில் அதிசய பாண்டிய வத்தராயன், விக்கிரம பாண்டிய வத்தராயன் (S.I.I. Vol. V Nos. 418) என வருவன போலக் கொள்ளப்படும். பாண்டிய வத்ஸ ராயன் என்பது பாண்டியனுடைய வத்தராயன் என்று பொருள் படுதல் கண்டு உண்மை யுணர்க. புறப்பாட் டின் கொளுவில் பாண்டியன் கீரஞ்சாத்தன் (178) என்பதும்

இவ்வாறே வந்தது காண்க. "கருவூர்ச் சேரமான் சாத்தன்' (குறுந்தொகை. 268) எனவருதலானும் உண்மை யுணரலாம். இதன்கட் சாத்தன் சேரமானுகாது கருவூர்ச் சேரமானுடைய சாத்தன் என்றாதல் கண்டு கொள்க. "சோழன் உய்ய வந்தான் குருகுலராயன்" (572 of 1922 Epigraphic Report—1923) எனவருவது காண்க. குருகுலராயன் என்பது வத்ஸராயர் பூண்ட மறு பெயர்: உதயணனைக் குருகுலக் குரிசில் என்பது பெருங்கதையிற் கண்டது. "கோடாதுயர்ந்த குருகுலக் குரிசில், வாடா நறுந்தார் வத்தவர் பெருமகன்") (பெருங்கதை 4-15-26-27) என வந்தது காண்க. புறப்பாட்டில் வஞ்சன் சேரன்தான் என்றற் கேற்ற குறிப்பு ஒன்றுமில்லாமை நோக்கி உண்மை யுணர்க. இவனிருந்த மலை "சாய மலை" என்ற பெயருடனிப்போது மலை நாட்டிலுள்ளது காணலாம். சாயமலை-உறங்குதற்குரிய இடமாகிய மலை. எ.று. இனி,

> "மெய் சொல்லாவி ராவணனை மேலோடி யீடழித்துப்
> பொய் சொல்லா துயிர் போனான்"
>
> (தேவா. புள்ளிருக்கு வேளூர்)

கழுகரையன் என்பது பற்றிக் கோசர் தாம் வாய்மொழிக் கியைவது கண்டு கழுகுமலை யென்று பெயரிட்டனரெனின் அமைவதே யாகும்.

இனி, நற்றிணையில்.

> "வரைபோல் யானை வாய்மொழி முடியன்
> வரைவேய் புரையு நற்றோள்" (390)

என்பதனுற் கூறப்பட்ட வாய்மொழி முடியனும் இக் கோசர் குடியினனெனை நினையலாம். மேலே சாசனத்துக் கூறப்பட்ட 'காரியானை முடிகொண்டான் மாநெடுவேல் வத்தர் வேந்தன்" என்பவன் இச் சங்க காலத்து 'வாய்மொழி முடியன்' வழியினன் என்று நினைவது பொருந்தும்.

இனிக் கோயன் பள்ளி என்பது கருவூரை யடுத்துள்ளது. இதனுற் கோசன் என்னும் பெயர் கோயன் என

வழங்கப்பட்டதென்றுணரலாம். கோயன்புத்தூர் என்பதும் இப்படிப் பட்டதேயாம். இக் கோயர் குடி கோய் எனவும் வழங்கப்பட்ட தென்பது இளங் கோய்க்குடி என்ற பெயரான் அறியலாம். முள்ளி நாட்டு இளங் கோய்க்குடி (அம்பா ஸமுத்ரத்தின் பெயர்) என்பது சாசனம் (Top List. Tinnevelly Dist. Nos. 28, 29 பார்க்க) "இளங்கோயுடையரன் முனையதரயன்" (S.I.I. VI. No. 538 of 1909) எனத் தஞ்சையைச் சேர்ந்த கோவிலூர்ச் சாசனத்து வருதலான், இக் குடி வழக்குண்மை உணரப்படும். திருநெல்வேலியைச் சார்ந்த கடையம் உள்ள நாடு கோய்நாடு என வழங்கப்படும். கோநாடு எனச் சாசனங்களிற் பிழைபட எழுதப்பட்டுள்ளது. கோநாடு என்பது வேறே இருத்தலான் இதன் பெயர் அங்ஙனமாகாமை எளிதினுணரலாம்.

இனி இக் கோசர் இயல்பில் முருடர் என்பதும் முற்காலத்துக் கள்ளை மிகவும் விரும்ப உண்டவர் என்பதும் தமிழ் நூல்களிற் கண்டனவேயாகும். இவற்றை

"இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்" (அகம். 90)

எனவும்,

"நனைக் கள்ளின் மனைக் கோசர்" (புறம். 396)

எனவும் வருவனவற்றான் அறியலாகும். இவற்றொடு பொருந்தக் கௌசாம்பியரைப் பௌத்த நூல்கள்கூறிய இடங்களில் முருடர் எனவும் கள் விரும்புபவர் எனவும் குறித்தல் காணலாம். இவ் வுண்மை வம்ஸர்கள் (வத்ஸர்கள்) முருடர் கொடியர் அவருடைய அரசன் அழித்தலை மேற்கொண்டவன் "என்று கூறிப் புத்தர் அவ்வத்ஸர் குடியில் அவதரிப்பது மறுத்தார்.

எனவும் புத்த ஜாதக சரிதையில் ஸுராபான ஜாதகத்தில் புத்தர் கோசாம்பியர்க்குக் கள்ளருந்துதல் குற்றமென்றும் அதற்குக் கழுவாய் புரிய வேண்டுமென்றும் மொழிந்தனர், எனவும் வருதலான் அறியலாம்.

இனிக் கோசர் பிற்காலத்துப் பாண்டியர்கட்குக் கைக்கோட் சேனைபதிகள் என்னும் பெயருடையரா யிருக்

தது, "இப்படிச் சம்மதித்து விலைப் பிரமாணம் பண்ணிக் கொடுத்தோம் ஆதிசண்டேச் சுர தேவர்க்கு : திருநெல் வேலிக் **கைக்கோட் சேனபதிகளோம்.** இவை அதிசய பாண்டிய **வத்தராயன்** எழுத்து. இவை விக்கிரம பாண்டிய **வத்தராயன்** எழுத்து (S.I.I. Vol. V. No. 418)" என வருதலா னறியப்படுவது. ஈண்டுக் கைக்கோட் சேனை என்பது அரசற்குச் சாதற் பொருட்டுச் சபதவிரதங் கொண்ட படையென்று நினையலாம். கைக்கோள்-கோச சபதம், விரதம் என்று கொள்ளலாம். கைக்கோள்—தம் ஒழுக்கமாகக் கைக்கொள்ளப் பட்டதொன்று. என்று. இவ்வாறே இவர் சோழர் கைக்கோட் படையாளராக வும் இருந்தனர் என்பதும் சாசனங்களாலறியப் படு வது. "திரிபுவன வீரதேவன் மெய்க்கீர்த்தியில் (புதுக் கோட்டைச் சாசனம் No. 163) "சாமரையும் **கோசராணையு** மேம் பரியும் கொடித்தேருங் குஞ்சரமும் வைகைநாடும்" சோழர் என்பதனாற் கொண்டாரெனத் தெரிதலால் சோழர் கோசரை ஆணையிடுவதை ஒரு பெருஞ் சிறப் பாகக் கருதினரென்பது புலனாகும். கோசம் என்பது கோசு எனவும் வழிபடுதல்" கோசுகுண்டு' என வரும் பாண்டி நாட்டு ஊர்ப் பெயரா னறிந்தது.

ஸ்ரீ ராஜ ராஜ தேவர் கைக்கோட் படை பராந்த கன் தெரிந்த கைக்கோளரும், சுந்தர சோழர் தெரிஞ் சகைக் கோளரும், (S.I.I. Vol. IV No. 391), பாண்டிய குலாசனி தெரிஞ்சகைக் கோளரும், அபிமான் பூஷண தெரிஞ்சகைக் கோளரும் (Epi. Report 1917 No. 633) என்பனவற்றால் கைக்கோளர் ஏதோ ஒரு முறையிற் பேரரசராற் றெரிந்து படையிற் சேர்க்கப்படுவ ரென் பது தெரிஞ்சகைக் கோளர் என்னுந் தொடரால் அறி யப்படும். இவருடைய சத்திய வீரத்திற் பேரரசர்க் குள்ள நம்புதலால் இவரைத் தம் அகப்பரி வாரத்து வைத்திருந்தன ரென்பதும்,

> "நம்பிராட்டியார் நேரியன் மாதேவி
> யகப் பரிவாரத்துக் கைக்கோளன் சோறு
> டையானருக்கனை அன்பார பாணதிராயன்"

(S.I.I. Vol. V No. 700) என வருதலான் அறியக் கிடப்பது. இக்கைக்கோளச் சேனபதிகட்கு விட்ட நிலங்கட்கு அரசர் உதிரப்பட்டி (ருதிர பத்ரிகா) என்ற ஒரு வீர சாசனம் கொடுப்பது வழக்கமென்பது பழைய கல்வெட்டுக்களால் அறியக் கிடப்பது. (Epi. Report 1917 No. 635). போரில் உதிரஞ் சிந்தும் வீரராதல் பற்றி இவ் வுதிரப்பட்டி கொடுக்கப்பட்ட தென்று நினையலாம். சாசனங்களில் இரண்டு கைமா சேனை, மூன்று கைமா சேனை என வழங்குதல் காணலாம். இரண்டு கை இடங்கை, வலங்கை யெனப் பகுக்கப்பட்ட சேனை வகை; நடுவிற் கையுங் கூட்டி இச் சேனை மூன்றுகையாகவும் கூறப்படும் என்று தெரியலாம். இதனாற் கை என்பது படை வகுப்பிற்குப் பெயராதலாலப் படைக்கைகளில் அமர்ந்த கோளர் என்று இவரைக் கொள்ளலாம். அங்ஙனங் கொள்ளின், கோசர் என்னுஞ் சொல்லே நாளடைவிற் கோளர் என மரீஇயின தென்று நினையலாம். கோசர் கோயர் என ஆகிப் பின் கோளர் என ஆயதெனக் கருதலாம். தாளி, தாசி என வருதலும் நினைக. திருக்கோளக்குடி என்பது கொடுங் குன்றத்துக்கு அணித்தாக மலையடியிலுள்ள ஊர். காளமேகம் பாட்டிலும் "கோள ரிருக்குமூர் கோள்களவு கற்றவூர்" என வருதல் காணலாம். கோள் எனப் பின்னே வருதலாற்கோளர் குடிப் பெயரேயா மென்க. பதிற்றுப் பத்துரையுட் படையை அணியாகவும் வகுத்தல் கூறுவர்.

சங்க காலத்துக் கோசரும் வேளிரும் வட நாட்டின் வேறு வேறு பகுதியினின்று தென்னாட்டுப்புக்கவராதலால் இவ்விருவரும் தமக்குள் ஒற்றுமை யுடையராய் வாழ்ந்தனரென நினைதற்கில்லை. கோசர் ஒரு குழுவாக ஒரு புறத்தும் வேளிர் வேறு குழுவாக வேறொரு புறத்தும் ஒரு நாட்டே வதிந்தன ரென்று நினையத்தகும்.

"ஸ்ரீ கோவிராஜ கேசரி பன்மர்க்கு யாண்டு எட்டாவது அடிகள் பழு வேட்டரையர் கண்டன் மறவனார்படை இளைய இரணமுக ராமனிற்கைக் கோளன் பல தேவன்

வயிரியைக் குன்றக் கூற்றத்து மல்லூரிருக்கும் வெள்ளாளன் கிழவனம்பனும் பலதேவன் வைரியும் தங்களில் உருவிக் குத்திப் பலதேவன் வயிரிபடக் கிழவனம்பனை அடிகள் பழுவேட்டரையன் கண்டன் மறவனர் சிறுபழுவூர்த் திருவாலந்துறையுடைய மஹாதேவர்க்கு இவனைச் சாத்தி ஒரு நுந்தா விளக்கு வையென்ன வைத்த சாவா மூவாப் பேராடு தொண்ணூறு'' (Vol. V. No. 670) என வருதற்கண் வேளாளர்க்கும் கைக் கோளர்க்கும் உள்ள பகைமை காணலாம்.

> " திதியன் வேளி ரொடு பொரீஇய
> கழித்தவாள் வாய் " எனவும்
> " ஞிமிலி வேண்மா னெயினற் கொன்று "

எனவும் வருமிடங்களால் இப்பகைமை சங்க காலந் தொட்டே உண்மை யுணரலாம்.

இனிக் கைக்கோட் படையாயும் கைக்கோட் சேனபதிகளாயும் தமிழ் மூவேந்தர்க்கு அகப்பரி வாரத்துக் காவற்றுணைவராயும் போர்த்துணை வராயும் விளங்கிய இக் கோசக் குடி மக்கள் தம் படை வீரத்திற்கு இடனில்லாது போய காலத்து நூல் நூற்றுத் துகில் செய்யுந் தொழிலை நாளடைவின் மேற் கொண்டன ரென்று நினையத்தகும். இவ் வுண்மை ''கைக் கோளப்படை'' (எனவும் ''கைக் கோளர் தறி'' (Epi. Report 1917 No. 310) எனவும் சாசனங்களில் வழங்கலால் வலியுறுவது. திவாகர நிகண்டிலும் ''செங்குந்தப் படையர் சேனைத் தலைவர், தந்து வாயர் காருகர் கைக்கோளர்'' (மக்கட் பெயர்த் தொகுதி) என வருவதைக் கொண்டு இவ் வுண்மை நன்குணரலாம்.